60

~~60~~

~~170~~

~~125~~ ~~129~~

135

135

ரா. சுப்பிரமணிய தேவர்,
மணியந் தீவு,
வேதாரணியம்,
"கைமுறை வைத்தியம்"

1

Verification completed 27/3/63

Palm leaf returned to individual on 23.5.63.

135

* *

கை முறை வைத்தியம்

திரு. ஏர். சுப்பிரமணிய தேவர்,

வேதாரணியம், அகஸ்தியம் பள்ளி.

* *

Total typed Pages 26

Completed verification on 27/3/63

1.2.63.

உரிமையாளரின் பெயர்: ஆர்.சுப்பிரமணிய தேவர்.

இடம்: வேதாரணியம், அகஸ்தியம் பள்ளி.

சுவடியின் பெயர்: கை முறை வைத்தியம்.

...

கை முறை வைத்தியம்.

அகஸ்தியர் குழம்பு:-

நாகேசுரம் விராகனிடை.க, மனோசிலை விராகனிடை.1, தாளகம் விராகனிடை.1, ரச கற்பூரம் விராகனிடை.1, இந்துப்பு விராகனிடை.1, சீனிக்காரம் விராகனிடை.1, வெங்காரம் விராகனிடை.1, அரிசி திப்பிலி விராகனிடை.1, கருஞ்சீரகம் விராகனிடை.1, பெருங்காயம் விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை.க, இதுக்கு சரி நிறையாக நேர்வாளம் சேர்த்து சுத்தி பண்ணி பருப்புக்குள்ளே யிருக்கும் இலை தள்ளி பருப்பு எடுத்து இரண்டாக பிரித்து ஒரு பாதி வறுத்துக் கூட்டவும். ஒரு பாதி பச்சையாக கூட்டவும். இந்த சரக்குகளுக்கு சுத்தி பண்ணுகிற வகை:

மனோசிலை சுத்தி:-

ஆட்டுக் கோமியத்தில் தோலாந்திரங் கட்டி நாழி.க, இருக்க சுத்தி ஆகும். ரசகற்பூரம்: சுத்தியாகிறது கொட்டாச்சியில் முலைப் பால் விட்டு அதில் போட்டு ஒரு சாமம் வெய்யிலில் வைக்க சுத்தியாகும்.

கெந்தகம் சுத்தியாகிறது: பசுவின் பாலிலே போட்டு ஒரு சாமம் வெய்யிலிலே வைக்க சுத்தியாகும். இந்த சரக்கு எல்லாம் சேர்த்து கல்வத்தில் வைத்து கத்தாழைச் சாறுகிலும் தேங்காய் பாலாகிலும் விட்டு மை போலரைத்து சிமிழில் வைத்துக் கொண்டு மிளகளவு கருப் புட்டியில் கொடுக்கவும். வயிறு போகும். அதிகமாய் போனால்குளிச்சுப் போட்டு மோருஞ் சோறும் சாப்பிடவும். ஈளை இருமலுக்கு கருப்புட்டியில் கொடுக்கவும். பித்தத் துக்கு கடுக்காய் சாத்தில் கொடுக்கவும். லிங்க மெழுகு எடுக்க சவ்வீர மெழுகு புங்கம் பால் கொண்டு வந்து ஓட்டிலே விட்டு அதின் நடுவே செந்திரிக்கம்வைத்து கொட்டாச்சி போட்டு மூடி யெரிக்க மெழுகாகும். இந்தப் பிரயோகம் சவ்வீர மெழுகு மெடுக்க லாம்.

வேறு. லிங்க மெழுகு: வீர மெழுகு:-

இன்னமொரு முறை சவ்வீர மெழுகு பச்ச சாதி யிளநீர் கொண்டு வந்து சட்டியில் யிளனித் தண்ணிரை விட்டு அதிலே விராகனிடை.உ, சவ்வீரம் போட்டு அடுப்பில் வைத்து தண் ணீர் வத்த மட்டுக் எரிக்க மெழுகு ஆகும். அதை எடுத்து கலசத்தில் வைத்து எட்டு விரா கனிடை மிளகு அரை விராகனிடை. ரச கற்பூரம் இளநீர்த் தண்ணீர் விட்டு மை போலே அரைத்து சிமிழில் வைக்கவும். இதற்குத் தீரும் வியாதியாவது உதிரக் கட்டி, வாய்வுக் கட்டி குன்ம வாய்வுக் கட்டி, குலையுள் புண்ணு முதல் சூத ஆத்து எல்லாம் தீரும்.

சுரம், சன்னி பக்க வாய்வு பாரிச வாய்வு இதுக்கு இஞ்சி சாத்தில் தேனி லேயுங் கொடுக்கத் தீரும்.

சாதிலிங்கம் கட்டு முறை:-

கெந்தகம், விராகனிடை.க, சவ்வீரம் விராகனிடை.க, சாதிலிங்கம் விரா கனிடை.க, மனோசிலை விராகனிடை.க, தாளகம் விராகனிடை.க, ரசகற்பூரம் விரா கனிடை.க, ரச செந்தூரம் விராகனிடை.க இந்தச் சரக்குகளெல்லாம் வெவ்வேறாய் பொடி பண்ணி வைத்துக் கொண்டு கரண்டியை அடுப்பில் வைத்துக் கொண்டு விளக்கெரியுறப் போலே தீப்ப் போட்டு முதல் கெந்தகப் பொடியைப் போட்டு மத்தப் பொடியில் சரக்கு வகையெல்லாம் ஒன்றொன்றாய் போட்டு எரித்து பதத்தோடே வருகிறபோது குப்பை மேனிச் சாறு விடவும். மறுபடி இறக்கி சாய்ச்சால் கட்டியாகும். இதுக்கு தீரும்வியாதி

சுரம், சன்னிவாதம், வாய்வு, பித்த சுரம் இதுகளெல்லாத்துக்கும் இஞ்சிச் சாத்திலாகிலும் சுக்கு, கிராம்பு கசாயத்திலாகிலும் உரைக்கத் தீரும்.

தாளகக் கட்டு:- (வேறு)

தாளகங் கொண்டு வந்து ஓட்டிலே வைத்து பிரண்டை சாறும் பிள்ளை நீரும் விட்டு சுண்ணாம்பு போட்டு கலக்கி சுருக்கு கொடுக்கவும். கட்டியாகும். அதை எடுத்துக் கொண்டு இதுக்குத் தீரும் வியாதி சுரம், சன்னி வாதம், வாய்வு, ஈளை இருமல் தேனிலே கொடுக்கத் தீரும். இருமலுக்கு தூதுவளை துளசிக் கசாயத்தில் கொடுக்க சனி வாத பித்த சுரத்துக்கு இஞ்சி சாத்தில் கொடுக்கத் தீரும்.

வேறு. தாளகக் கட்டு முறை:-

தாளகங் கொண்டு வந்து அரசன் பட்டை சாத்தில் தன்ன சாறும் விட்டு அம்மியில் வைத்து அரைத்து திரட்டி மாத்திரையாக எடுத்துத் திரட்டிக் கொண்டு அதின் மேலே கட்டி சீலை தெரியாமல் துணி சுத்தி நல்லெண்ணெயில் துவைத்துக் கொண்டு அகலில் வைத்து நல்லெண்ணை கால் சேர் விட்டு குழி வெட்டி அதில் பெரிய அகலைக் வைத்து அதுக்கு உள்ளாயிருந்த சின்ன அகலில் கொள்ளுகிற மாத்திரையை வைத்து விளக்கு போலே கொளுத்தி விடவும். வெந்து கட்டியாக கிடக்கும். அதுக்கு தீரும் வியாதி சுரம், சன்னி வாதம், தோஷம், ஈளை இருமல், சகலமுந் தீரும்,

கெந்தக மெழுகு:-

கெந்தகம் கொண்டு வந்து கரண்டியில் அடுப்பில் வைத்து வெள்ளாட்டு நெய் ஊத்தி எரிக்க உருகும். உருகிற போது பிரமிச் சாத்தில் ஊத்தி எடுக்க மெழுகாகும். இதுக்கு தீரும் வியாதி சகலமுந் தீரும்.

(வேறு)

நேர்வாளங் கொண்டு வந்து சாணிப் பால் கரைத்து அதில் போட்டு கொதிக்க விட்டு இறக்கி கொட்டி கழுவிப் போட்டு காய வைத்து உடைச்சப் பருப்புக்குள்ளே இருக்கிற நஞ்சு தள்ளிப் பருப் பெடுத்துக் கொண்டு எருமைப் பாலொரு படி வாங்கிக் கல்வத்தில் பருப்பை வைத்துப் பால் விட்டு எலுமிச்சங் காயளவுக்கு அரைத்து அதை ஒரு பாலிலே கலந்து காய்ச்சி உறை ஊத்தி வைத்து அதைக் கடைஞ்ச வெண்ணெ எடுத்து சிமிளிலே வைத்துக் கொண்டு பேதிக்கு வென்னீரிலே ஒரு குண்டுமணி அளவு கொடுக்கவும். வயிறு கழியும். தாங்கா மாட்டாது போனால் பச்ச சலத்தில் குளிச்சுப் போட்டு மோருஞ் சோறுஞ் சாப்பிடவும்.

கெந்தகச் சுத்தி:-

காடி ஆவின் பால் வெள்ளாட்டு பால் பசுவின் மோர், தேன் பசுவின் நெய், கருப்பஞ் சாறு, சங்கம் பழச் சாறு இந்த எட்டிலும் வெவ்வேறாய் சுத்தி பண்ணி வைத்துக் கொண்டு நெய் தேன் அந்தி சந்தி கால் விராகனிடை வைத்து சாப்பிடவும். சகல வியாதியும் கேட்கும். சொறி, சிரங்கு கருப்புட்டியில் கொடுக்கவும்.

பிள்ளை யில்லாத பெண்களுக்கு பிள்ளை யுண்டாக மருந்து:-

மாதச் சத்து முத்து வந்தவுடனே காலையிலே ஒரு பூ எருக்கம் பூவாக மூன்று பூ தின்று நாலா நாள் முழுகி வந்தவுடனே ஆழாக்கு நெய்யும் ஆழாக்குப் பாலும் குழப்பிக் கொடுக்கவும். மூனு நாள் கோழி முட்டை வெள்ளைக் கருவிலே எலுமிச்சம் பழச் சாறு விட்டுக் குழப்பிக் கொடுக்கவும். இது குளியும். பிள்ளையுமுண்டாவாள்.

not useful for our purpose

பல்லுப் புழுவுக்கு:-

நாயுருவி வேரும், இலையும் நருக்கி நோகிற புறத்தில் வைத்துக் கொண்டு ஒரு வருடமும் பேசாமலிருக்கப் புழு விழும். கொழுஞ்சி வேரரைத்து விளக்கெண்ணெயில் தின்ன தீரும். கை கண்டது.

தலை நோக்காட்டுக்கு:-

வெள்ளை வெங்காயம் மஞ்சள் கம்மாறு வெத்திலை, துளசி ~~[illegible]~~ கலந்த இந்த மருந்து ஒரு விளாங்காய் மாத்திரம் எண்ணை விட்டுக் காய்ச்சி அரக்கு பதத்தில் முழுகவும். அரப்பு சீயக்காயிட்டு முழுகவும்.

புகை வாங்க மருந்து:-

ஈசுர வேர் நருக்கிப் போட்டு பொடி பண்ணி இந்தப் பொடியை சீலையில் வெள்ளையில் துவைத்து விளக்கெரித்து நிறுத்திப் போட்டு நாசி இரண்டிலேயும் புகை வாங்கவும் ஒரு தலை வலி சன்னி நிற்கும்.

பறங்கிப் பட்டை சூரணம்:-

பறங்கிப் பட்டை பலம்.ய, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, நற்சீரகம் பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க, மலைதாங்கி பலம்.க, சாதிக்காய் பலம்.க சித்திரத்தை பலம்.க, மரிசம் பலம்.க, முத்தக்காசு பலம்.க, நன்னாரி வேர் பலம்.க, அதிவிடையம் பலம்.க, அக்கிறாகாரம் பலம்.க, கோஷ்டம் பலம்.க, சித்திரமூலம் பலம்.க, கண்டங்கத்திரி பலம்.க, முள்ளி வேர் பலம்.க, கொத்தமல்லி பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, லவங்கப்பட்டை பலம்.க, இது வெல்லாம் சூரணம் பண்ணி ஒரு நேரம் இரண்டு விராகனிடை கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி வாய்வு, சூலைக் கட்டு, புண் சேட்டை, மூக்கில் பக்கம் பீனிசம், கபால பீனிசம், சலப் பீனிசம், உச்சிப் பிளவை, கண்டமாலை, பவுத்திரஞ் சகலமுந் தீரும். இதுக்கு பத்தியம் சரகம், வெந்தியம், கத்தரிக்காய், உப்பு, புளி, மிளகு, கருவேப்பிலை, மொச்சைப் பருப்பு, துவரம் பருப்பு, புண்ணாக்கு, ~~[illegible]~~

~~ஒரு தலை வலிக்கு:- ஆவாரம் பிஞ்சையாகும். குத்திரர்க்கு கோழி கூட்டலாம். அவ பத்திய மாகாது.~~

(வேறு) ஒரு தலைவலிக்கு மருந்து:-

சித்திரமூலம் வேர் பட்டை, எலுமிச்சம் பழச் சாறு விட்டரைச்சு தலை வலிக்கிற புறத்திலே நரம்பு படைச்சிருக்கும். அந்த நரம்பில் கோல் கொண்டு மருந்தெடுத்துக் கீழ் நோக்கி மூன்று விடத்தில் சூடு போடநோவு தீரும்.

(வேறு) ஒரு தலை வலிக்கு:- சாறணை கொழுந்து கொண்டு வந்து கசக்கி மார் பக்கத்தின் கண்ணிலும், காதிலும், மூக்கிலும் நசியம் பண்ண தீரும்.

காச ரோகத்துக்கு சூரணம்:-

பறங்கி பட்டை பலம்.4, மரமஞ்சள் பலம்.வ, சாத்திர வேதி பலம்.வ ஊசிக்காந்தம் விராகனிடை.ரு, கோரோசினை விராகனிடை.க, மடலரிதாரம் விராகனிடை.க, நாராயணன் சுள்ளி வேர் பலம்.க இது வெல்லாம் இடித்துக் கொண்டு காட்டு மருந்து கடைச் சரக்கும் பொடி பண்ணிக் கொள்ளத் தேன் படி.வ், பசுவின் நெய் படி வெள்ளை வெல்லம் ஒரு வட்டு இது வெல்லாம் கூட்டப் போட்டு ஒரு விறகு கொண்டு எரியிட்டு கமலாக்கினியாக எரித்துக் கொதி கிளம்பிநல் பிறகு மருந்தெல்லாம் போட்டு கைவிடாமல் துளாவிக் காய்ச்சி மண் குவித்து அதின் மேலே தண்ணீர் வார்த்து அதின் மேலே இறக்கி வைத்து முப்பது நாழி சென்ற பிறகு எடுத்து வைத்துக் கொண்டு இது சாப்பிட முதல் நாள் தலை முழுகி ஒரு படி கோழி மிளகு நீர் இடித்துக் காலம்பர ஒரு கரண்டி இந்த மருந்து கொள்ளவும். இந்தப் படி நாற்பத்தெட்டு நாள் கொள்ளவும். இது கை கண்டதுக்கு திட்டம். பத்தியம் சகலமும் ஆகும்.

மூலத்துக்கு:- ஆசனங் கடுத்து ரெத்தம் விழுகிறதுக்கு மருந்து:-

கருணைக் கிழங்கு அவித்து நெய் விழுதில் கலந்து தின்னவும். இது இரண்டும் சரி கலந்து தின்னவும். ஆசனத்தில் கடுப்பு கண்டால் கட்டுகிறது:- பழம் பாசி கொண்டு

வந்து விளக்கெண்ணெயில் வறுத்து ஆசனத்தில் கட்டவும் கடுப்பு நிற்கும். இது பிரமாணத்து சொன்னது.

(வேறு) திலதம் :-

பேய்ப்புடல் விரை களஞ்சி சிறு பூசனி விரை, களஞ்சி அரம்பொடி களஞ்சி, நாயுருவி விரை களஞ்சி கோரோசினை களஞ்சி, தேன் களஞ்சி, கூசிக் காந்தம் களஞ்சி காது குரும்பி களஞ்சி இது வெல்லாம் கூட்டி திலதம் போடவும்.

(வேறு) செங்குருங்கன்னி விந்தம், சீந்தல் முள்ளி விந்தம், அங்கரிதாரம், கோஷ்டம், ஆன் முலைப் பாலூட்டி சங்கரன் தலை யிதப்பி தய்யலே புணர் வீராகில் அங்கவள் தாயும் பெண்ணும் அருமையாவாள் கண்ணே.

ஆவாரை கொன்னை, நல்ல அழகிய பூவரசு அந்தி தெரிய மருதம் பட்டை நெத்திவ யொக்க கூட்டி புவனி மடந்தை மாதே புதிய தோ கேளிர் கொள்ள காவேரி நீரும் வத்திக் கடல்களும் சுவறு மென்றே.

அரையாப்புக்கு பத்து :-

சித்திர மூலம் அரைத்து கோழி முட்டை விட்டு மத்திச்சுப் பத்துப் போடவும். கரையும். கை கண்டது.

மேக வெட்டைக்கு மருந்து :-

கோழி முட்டை ஒன்றும் கழிச்சி பருப்பு இரண்டும் இது இரண்டும் பொரிச்சு மூன்று நாள் சாப்பிடவும் மேகம் உடனே நிற்கும். இது கை கண்டது.

அடப்பனுக்கு மருந்து :- not useful.

நாபி, காந்தம், தில்லைம்பாலை ஊறப் போட்டது மூன்று விராகனிடை, நேர்வாளம் போட்டு வைத்துக் கொண்டு கொள்ளித் தெரியனடப்பன் கொண்ட மாட்டுக்கு ஒரு உருண்டை அரைத்துப் போடவும். வென்னீர் காய்ச்சி ஆற வைத்து வைக்கவும். இந்த உருண்டை குப்ப மேனிச் சாத்திலரைத்து முன் குளம்புக்கும் கண் காது முன் குளம்புக்கு இந்த உருண்டை கட்டவும்.

அரிதார பற்பம் :-

அரிதாரம் வேண்டியது கொண்டு வந்து குமரிச் சாறு, மேனிச் சாறு விட்டு அரைத்து தகடாகத் தட்டி காய வைத்துக் கொண்டு அகல்க் கொண்டு வந்து அகல் கீழும் மேலும் மருந்து வெள்ளை பொடி செய்து நடுவில் வைத்து மூடி அகலுக்கு சீலை மண் செய்து முழம் சாண் புடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு சகல வியாதிக்கும் அநுபானத்தில் இடவும்.

வங்க செந்தூரம் :-

காரீயம் வேண்டியது கொண்டு வந்து சுத்தி பண்ணிப் போட்டு பொன்னவாரை யிலை சிறுகச் சிறுகப் போட்டு ஒரு சாமம் வருக்கவும். செந்தூரமாம். எடுத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு அநுபானத்திலிடச் சகல மேகம் நிற்கும். வாயுவும் நிற்கும்

பாலசக்கிரை வகை :-

கோரோசினை பணவிடை இரண்டு, லவங்கப்பூ பணவிடை இரண்டு, ஏலம் விராகனிடை.உ, சிறும்பு விராகனிடை.உ, தாளிச பத்திரி விராகனிடை.உ, கூடுகுரோகணி விராகனிடை.ரு, சாதிபத்திரி விராகனிடை.உ, சாதிக்காய் விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ சுக்கு விராகனிடை.உ, வால்மிளகு விராகனிடை.க, சன்னலவங்கப் பட்டை விராகனிடை.க, மரிசம் விராகனிடை. சீரகம் விராகனிடை.உ, பேரீச்சம் பழம் விராகனிடை.ரு, கொடி முந்திரிகை பழம் விராகனிடை.உ, கோஷ்டம் விராகனிடை.உ, அதிமதுரம் விராகனிடை.உ, சடாமாஞ்சி விராகனிடை.உ, சர்க்கரை பலம்.ய, பசுவின் பால் குன்னி கொண்டு வந்து சர்க்கரை பண்ணினது மத்த மருந்துகள் சத்தை புடம் பண்ணி பொடி பண்ணி வடி கட்டிக் கொண்டு

எல்ாம் கருந்த கொண்டு தின்னவும். அந்தி சந்தி பத்து நாள் பாக்களவு சாப்பிடவும். இது மேகம் இருபத்தொரு மேகமும் நிற்கும். சீமேகம், கம்பி மேகம் நிற்கும். இது கை கண்டது.

அரையாப்புக்கு: பத்து:-

ஊமத்தையிலை அந்தக் கட்டி மேலே வைத்து தட்வி அது மேலே செங்கொட்டை பால் கொஞ்சம் போடவும். அது மேல் சுண்ணம்பு நீரும் கோழி முட்டை வெள்ளை கருவும் மத்திச்சுப் போடவும். இந்தப் பத்து எடுபடாது போனால் இதுக்கு மாத்து செம்பையிலை திக விளக்கெண்ணை குத்தி வதக்கி கட்டவும். இதுக்கு மிஞ்சிப் போனால் வேப்பிலை மஞ்சள் அரைத்து போடவும் புண்ணாறும்.

(வேறு) சன்னிக்கு (உரு) போடவும்.

வேதுக்கு:-

நொச்சி முடக்கொத்தான் மலை வேம்பு எருக்கு இது வேது வைத்து வார்க்கவும். இதுக்கு சன்னி பதினெட்டு வகையும் தீரும். வாதம் என்பது வகையும் தீரும். வண்டு கடி பதினெட்டு வகையும் தீரும். ~~வாதம் என்பது வகையும் தீரும். தஞ்சாவூர் முத்தையா பிள்ளை சொன்னது. கை கண்டது.~~

சகல வாதத்துக்கும் தயிலம்:-

மரிசம், வெந்தயம், கருஞ்சீரகம், வெண்பாடன் பட்டை முசெருக்கு சதிரக் கள்ளிப் பால் சேர். ௫ பதம் பொன்னிறம். குப்பை மேனிச் சாறு உழக்கு பொடுதலைச் சாறு உழக்கு தழுதாழைச் சாறு உழக்கு கழச்சிச் சாறு உழக்கு கூட்டி வேப்பெண்ணை உரி விட்டுக் காய்ச்சிக் கடுகாய் இறக்கி பதம் பண்ணிக் கொண்டு ஒரு தேத்தாங்காய் பிரமாணம் கொடுக்கவும். இப்படி பத்து நாள் கொள்ளவும். பத்தியமில்லை. கடுப்பு, கால் கடுப்பு குத்தல், குடைச்சல் தீரும். கை கண்டது.

வாதத்துக்கு பூச்சு மருந்து:-

சாதிலிங்கம், செங்கழு நீர், கோஷ்டம், வசம்பு இதுகளெல்லாம் எருக்கம் பால் வார்த்து அரைத்து பூசவும். வசம்பு கால் களஞ்சி கூட்டிக் கொள்ளவும். இது கை கண்டது. கிளிஞ்சி சதையைக் கறி அரைச்சு ஐந்து நாள் ஆறு நாள் கொடுக்கவும் தீரும். இது கை கண்டது.

ஊசல் கனத்துக்கு:- வலிப்புக்கு:-

வசம்பு ஒரு யிறையும் உள்ளி பூண்டு ஒண்டு துளசிலை, சின்னியிலை, சீந்தில் வீயா யிலை இது ஒரு சரி அகத்திப் பருப்பு இரண்டு கூட்டவும். இந்த மருந்து முலைப் பாலில் நனைந்து நன்றாக பிசைந்து நனைத்துப் பொட்டணங் கட்டிக் கொண்டு வலிப்பு வந்த வுடனே உச்சி மயிரைப் பிடிச்சு மல்லாத்திக் கொண்டு இரண்டு நாசியிலும் ஈரம் பட விட வும். பார்த்துக் கொண்டு இரண்டார் நாள் வலிப்பு வந்தால் அந்தப்படி பண்ணவும். தீரும். பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். இந்த மருந்து அசசமில்லை தீரும்.

சகல சுரத்துக்கு சகல வாதத்துக்கு தயிலம்:-

துளசி தூதுவளை கஞ்சாங் கோரை பூக்கா வேளை பேய்ப்புடல் பற்பாடகம் கண்டதிப்பிலி சதகுப்பை, பிரண்டை சமனாக கூட்டி கசாயம் வைத்து கொடுக்கவும். சன்னி வாதம் சுரம் சகலமும் தீரும். கை கண்டது.

தைலம்:-

விளக்கெண்ணை நாழி வைச்சி ருதிப் பால் ஒரு சேர் வெம்பாடப் பட்டை, மரிசம் செவியம் இந்த மூன்றும் அரைத்து எண்ணையும் பாலும் விட்டு வடித்து வைத்துக் கொண்டு சகல வாதத்துக்கும் பூசி பிடிக்கவும். சந்தே பிடிக்கவும். இது கை கண்டது.

விரேசனத்துக்கு:- கொம்மட்டிக்காய் கடுகு பேய்க் கொமட்டி சாறு நாழி, ஈர வெங் காயம் சாறு நாழி, காய்ச்சி அதின் பேரிலே மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக்

கொள்ளவும். சுக விரேசனம். மாத்து குளிர்ந்த தண்ணீரிலே முழுகி மோருஞ் சோறும் சாப்பிடவும்.

<u>மேக வெட்டைக்கு</u>:-

கோழி முட்டை மூன்று (கழற்சிப் பருப்பு) கஞ்சிப் பருப்பு போட்டு பொரிச்சு மூன்று நாள் தின்னவும். இதுக்கு பத்தியம் பசுவின் பாலும் சோறும் சாப்பிடவும். மறுபடி ஒன்றும் ஆகாது. கை கண்டது.

<u>காதில் புழு விழ</u>:-

கொள்ளைக் காய் நருக்கி கசக்கி காதில் பிழிய புழு விழும். முருங்கிலைச் சாறு காதில் பிழிய விழும்.

<u>ஈளை இருமல், மந்தார காசம், சுவாச காசம், மூர்ச்சை, இரைப்பு, காமாலை பாண்டுவுக்கு குண்டலாதி லேகியம்</u>:-

குண்டலி மூலம் வேர் உஉய சிறுக தரித்து இடித்து காணி நீர் விட்டு நாலொன்றாய் காய்ச்சி வடித்து இதுக்கு கற்கம் வேர்க் கொம்பு மரிசம்மாகாதம், மாகாத மூலம் நெல்லி முள்ளி, தானிக்காய், கடுக்காய், ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோஷ்டம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, அக்கராகாரம், சித்தரத்தை, சிறு தேக்கு, கற்கடசிங்கி, கருஞ்சீரகம், வெளிச்சைப் பிசின் இந்துப்பு சடாமாஞ்சில் இவை ஒரெரான்று கழஞ்சு சூட்டி பொடி செய்து கசாயத்துடனே கலந்து தேன் படி க, வெல்லம் பலம் அரை விட்டுக் கிளறி தினமும்கழஞ்சி மருந்து தின்னவும். முன் சொன்ன வியாதியெல்லாந் தீரும்.

<u>மஞ்சக் காமாலைக்கு மருந்து</u>:-

கோமடல் கொண்டு வந்து நருக்கி அதில் ஒரு சிராங்காய் பச்சை பயறு அதக்குள்ளே வைத்து ராத்திரிக்கு பனியில் வைத்து காலமே பசுவின் பாலில் அரைத்து கால் படி பாலில் கொள்ளவும். ஐந்து நாள் ஐந்து நேரம் கொள்ளவும். மஞ்சக் காமாலை நிற்கும். இது கை கண்டது. பூலோக செந்தூரம் அரைப் பணவிடை போட்டுக் கொள்ளவும். இந்த மூன்று மருந்து கொள்ளவும். ~~சுவாமி நாத முதலியார் சொல்படி.~~ கை கண்டது.

<u>தீராத பெரும் பாட்டுக்கு மருந்து</u>:-

முருங்கைப் பூ படி, மரிசம் விராகனிடை ங, திப்பிலி விராகனிடை ங, இது சிறு சட்டியில் விட்டு மூடிச் சீலை மண் செய்து எருமுட்டை அடுக்கி முழ உ. சாம புடம் போட்டு எடுத்து சூரணம் பண்ணி அந்த சூள் மூன்று விரல் கொண்டது தேனில் குழைத்து அந்தி சந்தி கொடுக்கவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். பெரும்பாடு தீரும்.

<u>மாந்தம், கணம், அத்தி மாலை, காமாலை, அழுக்காமாலை, வாலப்பாண்டுக்கு கோரோசினை மாத்திரை</u>:-

கோரோசினை, ஆமையோடு, கடுகுரோகணி வகைக்கு விராகனிடை க, சந்தனம் கலங்கெம்பு சீவினது, உத்திராட்சம், சீரகம் வகைக்கு விராகனிடை உ, நன்னாரி வேர் நாயுருவி வேர், கிரந்தி நாயகன் வேர், கீழா நெல்லி வேர் வகைக்கு விராகனிடை ங, செம்பருத்திக் கொட்டை பருப்பு, நாமம் கட்டி வகைக்கு விராகனிடை ரு, இது குழிக் கல்லிலிட்டு கற்பூர வல்லியிலைச் சாற்றில் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இதுக்கு அநுபானம் கற்பூர வள்ளிச் சாற்றிலாகுதல் முலைப் பாலிலாகுதல் வெந்நீரிலாகுதல் வல்லாரைக் கசாயத்திலாகுதல் இதுகளில் விட இதுக்கு தீரும் வியாதி மாந்தம், கணம், அக்கரம், அத்திசுரம், காமாலை, அழுக்காமாலை வாலாபாண்டு இதுகள் தீரும். கை கண்டது.

பெரும்பாட்டுக்கு:- அறுகன் வேரை பசுவின் பாலில் அரைத்து மூன்று நாள் கொடுக்கவும். கொடுத்த பிறகு சிறு பயறு போட்டு கஞ்சி காய்ச்சி குடிக்கவும்.

வச்சிர ல்வண வடகம்: எட்டு வகை குன்மம் சத்தி உள்படநிற்கும்:-

பிரண்டை கொடுவேலி, சாறணை வேர், நாயுருவி, எருக்கு சக்கை, வாழைச் சரகு, சிவதை வேரு, கண்டங் கத்திரி வேர், முள்ளிப் பழம், சுண்ணாம்புக் கல்லுப் பொடி, எல்லாம் கூட்டி சாம்பலாக்கி நீரித்து சூரணம் பண்ணி நல்ல வெல்லம் தேன் பாகாய்க் காய்ச்சி இதில் இந்த சூரணத்தை கலந்து கொண்டு தானிக்காய் போலே வடகம் பண்ணி இள வென்னீரில் தின்ன ஒரு வடகம் கொடுக்கவும். சகல குன்மமும் சத்தி குணமுமாம்.

மண்டை வாதத்துக்கு, இரைச்சலுக்கு, தலை வலிக்கும்:-

நொச்சியிலை, துளசியிலை, முருங்கையிலை, வளர்கிழங்கும் பனைமட்டைச் சாறு மஞ்சள் கிழங்கு, கய்யாந்தி கரை, வெள்ளுள்ளி, நாய் வேளை வேப்பிலை எல்லாம் சமனாய் ஒவ்வொன்றுக்கு சாறு உழக்கு தேவதாரம், கோஷ்டம், இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், வசம்பு, பிரமுருங்கை வேர், கொடி வேலி வேர் இது ஒவ்வொன்று நாழி எண்ணைக்கு கழஞ்சு கூட்டி அரைத்து கரைத்து பதத்தில் வடித்த தலையில் வார்த்து முழுகவும். தீரும் வியாதி மண்டை வாதம், வலி இரைச்சல், தலை வலியும் தீரும். கை கண்டது.

கய்யாந்த கரை நாயுருவி, கருந்தக்காளி தூதுவளை, மெய்ய எருக்கம் பூவு இரண்டு வேலிப்பருத்தி இலை நான்கும் நொய்யா மருசி தன்னுடனே நேக அடை சுட்டு கையாலெடுத்து தின்பிறுய் கணை -----வேண்டாம் கண்டீரே.

இண்டி லை எருக்கிலை, யிங்கு தூதுளை, கண்டொடு சர்க்கரை கலந்து தேனொடு உண்டிட யிருமல் தான் ஓடாதா யிடில் தெண்டமு மிசைப்பேனே ரேனல்லவே சுக்கு, திப்பிலி பெருங்காயம், சொல்லாப் பெரிய மிளகு கஞ்சா தக்க புகழ சேர் சாதிக்காய், சாதி பத்திரி அதிவிடையம் மக்கந் தன்னில் தகரை சோம் வாழுங் காரம்பு கடுக்கா ஓமம் வெள் ளுள்ளி ஒவ்வொன்றும் ஐந்து விராகனிடை அறமகிமை போல் சுக்கிழைத்து அமுர்த கடுக்காய் விரை போக்கி செக்க சிவக்க வறுத்ததனை சீயய் பொடி செய்தெடுத்து வைத்து இதற்கு வெல்லம் பலம் ஐந்து இனிய பசுவின் நெய் உழக்கு ஒக்க காய்ச்சி வடியிட்டு உருட்டி விராகனிடை கொள்ள சுக்கயில்லை, சுவமுண்டு சொன்னேம் வாய்வு வணுகாதே. ஒரு முன்னிற்க.

எலி கடித்து மருந்து:-

பருத்தி வேர், விளா வேரும் அரைத்து தின்ன எலி கடி நாள்பட்டது தீரும்.

தருணமா முலையாய் கேளாய் தவிமதர்ச்சடை யோனனை
மரணமாம் படிக்கு வந்து மாகைம் வலித்தாகில்
வருணமாம் மணியே போல வாயிடும் சுண் ம்போடு
முரணிய உள்ளி வேளை மூக்கதில் பிழிந்திடீரே

உத்தரெல்லாமுடன் கூடி உழலும் படியே ஒவ்வொன்றாய்
கற்றூர் தா முருங்கையும் வசம்பு காயம் பனரிக்குச் சுக்கு
கொற்றுன் கொழிஞ்சி யிவை கூட்டி மூக்கில் பிழிந்திடீரே.

பிரமிச் சாறு நாழி பசுவின் நெய் நாழியில் இதில் போடுகிற மருந்து சிவதை வேர், மரமஞ்சள், கடுக்காய், நெல்லிக்காய், வாலுழுவை அரிசி, வீழல் அரிசி, திப்பிலி அதிமதுரம் இந்துப்பு கற்கண்டு இவை ஒவ்வொன்று ஒரு பலம் கூட்டி அரைத்து கலந்து காத்து வாய் கட்டி தினம் தினம் ஒரு விராகனிடை கொள்ள பித்த பாடு ரூபம் தீரும். மூன்று நாள் கொள்ள வாக்குண்டாம். ஏழு நாள் கொள்ள பத்தியுண்டாம். பதினைந்து நாள் கொள்ள பித்தம் சொன்னதெல்லாம் தீரும். ஒரு மாதங் கொள்ளக் கவி பாடலாம்

ஒபரு வியாதிக்கு தயிலம்:-

நெல்லிக்காய், கெந்தகம் பத்து பலம், பொடி செய்து குண்டு சட்டியில் பசும் பால் வார்த்து சீலை வேடு கட்டி சீலை மேல் கெந்தகப் பொடியை வைத்து படிகமிட்டு

மூடி வேக வைத்தால் அந்த கெந்தகப் பொடியெல்லாம் கரைந்து பாலிலே விழும். விழுந்த பொடியை எடுத்து ஒரு சாண கலம் ஒரு சீலைத் துணியில் நெய்யைத் தடவி அதின் மேலே பொடியைப் பரவி தடவி திரியாய்த் திரித்து நெய்யில் தோய்த்து நெருப்புக் கொளுத்தி நெய் பழகின கலசத்தில் பிடித்தால் தயிலம் விழும். அதைப் பழம் பண்ணி வைத்துக் கொண்டு பாலொடு இது நாலு சமகைச் சூரணம் பண்ணி விராகனிடை உள்ளங் கையில் வைத்து நனையத் தக்க தயிலம் விட்டு குழப்பி ஒரு மண்டலங் கொள்ளவும். பெரு வியாதி தீரும். இதுக்கு பத்தியம் பசுவின் பால் பசுவின் நெய் கூட்டவும்.

ரெத்த மூலத்துக்கு மருந்து :-

சுக்கு, மிளகு, செவ்வியம், இந்துப்பு, சாதிக்காய், கோஷ்டம், அதிவிடையம், நற்சீரகம், அதிமதுரம், சிறுதேக்கு ஏலம், இலவங்கம் இலவங்கப் பத்திரி, சிராம்பு, வெண்காரம், அசமதாகம் கற்கடக சிங்கி ஒவ்வொன்று விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை சர்க்கரை விராகனிடை.௯உ, இந்த கடைச் சரக்கெல்லாம் பொய்வரை கொண்டு இடித்து வடி கொண்டு பிறகு சீனியும் போட்டு சரித்து புதுக் கலசத்தில் வைத்து வேடு கட்டிக் கொண்டு வெருகடி பிரமாணம் அந்தி சந்தி தின்னவும். பத்தியம் வாழைக் கச்சல், தூதுவளங்காய் கூட்டவும். உப்பு, புளி ஆகாது.

விப்புருதி எண்ணெய் :-

காட்டு குறிஞ்சா வேர், மிளகு சாறணை வேர், கொடிவேலி வேர், மாவிலங்கை வேர், நிலப்பூலாய் வேர், சங்க வேர், தூதுவளை வேர், எருக்கம் வேர், பெருமருந்து வேர், ஒவ்வொன்று விராகனிடை ஒன்று வசம்பு, வெள்ள வெங்காயம், பெருங்காயம், கடுக்காய், கருஞ்சீரகம், பூதகரப்பான் பிட்டை, வலம்புரிக்காய், ஒவ்வொன்று விராகனிடை.க, நல்லெண்ணெய் ஒரு படி எரித்து மெழுகு பதத்தில் இறக்கி மறு இரண்டு காசிடை உள்ளுக்கு மருந்து கொடுத்து கட்டியிலும் பூசவும். பத்தியம் ஒன்றும் ஆகாது.

மதன காமசுரம் மருந்து :-

சாதிக்காய், சாதிப்பத்திரி, சிராம்பு, ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, அவின், சடைக் கஞ்சா சர்க்கரை பசும் பால், தேங்காய்ப்பால், முருங்கைப்பூச் சார் இது வெல்லாம் கூட்டி லேகியம் பண்ணி இறக்கிற வேளையில் பசுவின் நெய் விட்டு இறக்கவும். கழக்கொட்டிக்காய் பிரமாணம் கொள்ளவும். புளி தவிர்க்கவும்.

அதிமதுரம், அமுக்கிரு வேர், கல்பிச்சி வேர், நெருஞ்சி வேர், நிலப்பனைக் கிழங்கு, தண்ணி மிட்டான் கிழங்கு, பூனைக் காலி விரை, நெல்லி முள்ளி இலவம் பிசின், இது சமபாகம் கூட்டி இடித்துச் சீலை வடி கொண்டு பசுவின் பால் பச்சைப் பாலாக கொள்ளவும். இப்படி பதினைந்து நாள் கொள்ளவும். வீரிய வர்த்தனையாம்.

மலக்கட்டுக்கு மருந்து :-

கத்தாழஞ் சாறு.உ, கழிப்பாக்கு.சீ வேப்பருக்கு, உய, புளியருக்கு முப்பது, புதமியிலை ஒரு பிடி, கடுக்காய்க் கொட்டை விரை போக்சி.உ இது வெல்லாம் பாண்டத்திலிட்டு குருனி தண்ணீர் வார்த்து கால் படி ஆக காய்ச்சி விடியக் காலத்தில் கொள்ளப் பேதியாகும். இதுக்கு மாத்து மிஞ்சிப் பேதி ஆனால் குளிர்ந்த தண்ணீர் காலில் வார்க்க மட்டுக் கட்டும்.

கெற்ப வியாதிக்கு மருந்து :-

மலைவேம்பிலை இரண்டு பிடி பறித்து இடது கையிலேயை எரிந்து போட்டு வலது கையிலேச் சாத்தை பிழிந்து ஆனவசம்பு பெரியதாக உரைத்துத் தலை கிளம்ப எழுப்பிக் கொடுக்க வீடு தூரம் ஆவாள். மூன்று நாளுங் கொடுக்கவும். கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். மறு மாதம் வலி தீர்ந்து கெற்பம் தரிக்கும்.

மறு மருந்து :-

மறு மருந்து :-

பிரண்டைச் சாறு, நாழுழி கடைச் சரக்கு கருஞ்சீரகம், அசமதாகம், கார் போக அரிசி, திப்பிலி, மிளகு ஒவ்வொன்று பலம்.க அரைத்து அந்தச் சாத்தில் கரைத்து மெழுகு பதத்தில் இறக்கி தின்னவும். அந்தி சந்தி தின்னவும். கெற்ப விப்புருதி ~~சுகம்~~ தீரும் - கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ஆறாத புண்ணுக்கு எண்ணெய்:-

வேப்பெண்ணை உரி, குண்டு மணி ஒரு சிறங்கை பொன்னிறமாக வறுத்து யெண்ணை யில் எரித்துப் பூசத் தீரும்.

(வேறு) அனிச்சை வேர் ஆடு தின்னப் பாளை வேர், அமுக்கிற வேர், உள்ளி, வசம்பு வகை ஒன்றுக்கு விளாங்காயத்தனை அரைத்து விளக்கெண்ணை ஒரு படியில் எரித்து முழுகின மூன்று நாளும் ஒழுக்கெண்ணை கொடுக்கவும். பூச்சி செத்து போம்.

கள்ளிப் பால் நாழி கறந்து வந்து வெய்யிலிலே வைத்து ஆடை கிளம்பும். அந்தப் படி மூன்று தரம் ஆடை எடுத்துப் போட்டு பசும்பால் ஒரு படி காய்ச்சி ஒரை குத்தி அதி லே கள்ளிப் பால் விட்டு தோய்ந்த பிறகு கடைஞ்சு வெண்ணை எடுத்து அதிலே புளியங் கொட்டை மாத்திரம் தலிட்டிலே பிரட்டி கொடுக்கவும். வாந்தி புண்ணும் வயறு கழியும். தண்ணீர் வேண்டுமென்றால் உரிய பசுவின் பால் கொடுக்கவும்.

ஊறங் கொழுந்து, கீழாநெல்லி வேர், ஒரு பிடி, கருங்கொடியிலை.ச, காக்கரட் டான் இலை.உ, சீந்திக் கொடியிலை பலம்க, தேனில் மூன்று நாள் கொடுக்கவும். கசப்பு புளிப்புத் தவிர்க்கவும்.

அண்ட வாதத்துக்கு:- not clear

பாக்கு, வெத்திலையும், எருக்கம் பூவும் தின்ன அண்டவாதம் தீரும். பாக்கிலே யும், பாகல் வேரும் தின்ன தீரும். கிராணி பொருமல் எரிச்சல் செரியாமல் புளித்தேப்பம் மிகவிடுதல் இருமலருவர தம்மலுடன் யிசைந்த எப்பம் மிகவுண்டாம். பெருகப் பெருக அபான முடன் வரிசைக்குரிய பலன் குறையும். வாயுக் கிராணி வகையாமே. பொருமி இரையும். சத்திருக்கும். போதப் பறந்த தாளதைத்துவைத்து மாயும் சனஞ் செல்லாது. வறண்ட உடம்பு வத்தி வரும். பருகும் தண்ணீர் நாவறரும். பலகாலனந்த மிகவுண்டாம். வெருவும் வாயுக் கிராணி யென விரத்துப் பேசி விருப்பினரே. அவின் தின்னத் தீரும்.

இன்னம் மருந்து:-

செங்குருவி வேர், நத்தைச் சூரி வேர், கலரியுடனரைத்து ஓ.\.பஞ்சுட்டு நல்லெண்ணையில் தேய்த்து தின்னத் தீரும். பூலாவேர் ஒரு அம்மானை அளவு அரைத்து பசுவின் பாலில் கரைத்து கொதிக்க வைத்து இருபது கொடிக்கழல் மணியை பொடி செய்து (பழமாக்கவும்) அதுக்கு பிறகு நெய் கண்ணில் விடவும். ~~[illegible]~~

சங்கம் பழம்.ருய, மிளகு.ருய, சுக்குத் தோலும் கடுகும் கழஞ்சே கால் உள்ளி அரிசி.ஙய, எடுத்த எலும்பு ஒரு பிடி இவை யெல்லாம் ஒன்றாக அரைத்து உருண்டை செய்து நிழலுலத்தாயு உலர்த்தி காலனென்று பேருமிட்டு வைத்துக் கொண்டு விஷந் தீண்டி செத்தால் சவித்துக்கு ஒரு கண்ணிலிட ஒன்றரை நாழிகை கண் மிடி முழிக்கும். ~~ஒரு பாதம். மலையாளம். மயிர் மாணிக்க பிள்ளை சொன்னது. சிட்டாந்திரம். கை கண்டது.~~

குதக வாயுவுக்கு மருந்து: கல்லுடைச்சலுக்கு: மருந்து:-

ஒரு பிடி மிளகு வறுத்து மாவிலங்கை யிலை ஒரு பிடி போட்டு இரு நாழி நீர் விட்டு மூன்று நேரங் கொடுக்கவும். வெள்ளுள்ளி தயிலங் கூட்டிக் குடிக்கவும்.

கல்லுடைச்சலுக்கு:- சிறுபிசரிக் கொடி பிடுங்கி வந்து இரு நாழி தண்ணீரில் போட்டு காய்ச்சி அந்தக் கசாயம்.தெ, இதில் நல்லெண்ணை.தெ, புங்கஞ் சாறு.தெ இந்தப் படி

ஐந்து நாள் குடிக்க நீர்க் கடுப்பும் நின்ற பதினெட்டு கல்லும் விழும். பத்தியம் பிடிக்கவும்.

மூத்திர ரோகத்துக்கு:-மேக வெட்டைக்கு: காரு மேகத்துக்கு நெய் வைக்க:- 2.2.63.

தேத்தான் விரை கல்லிலே உரைச்சு ஒரு எலுமிச்சங் காயளவு வைத்துக் கொண்டு சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், அதிமதுரம் வகை ஒன்றுக்கு விராகனிடை கொண்டு வந்து பொடி பண்ணி வைத்துக் கொண்டு அதின் மேலே ஒன்றரை சேர் பசுவின் நெய் கொண்டு காய வைத்து பொங்கி வருகிற போது முன் சொன்ன தேத்தான் விழுதை நெய் யிலே போட்டு முன் சொன்ன பொடியை கூடப் போட்டு கொதிக்க வைத்துக் கொண்டு கடுகு மெழுகு பதமாய் வருகிற போது வடித்துக் கொண்டு அதுக்கு மேல் சர்க்கரை போட்டுக் கொதிக்க வைத்துக் கொண்டு தினம் ஒரு பாக்கு அளவு இருபது நாளைக்குத் தின்னவும். இதுக்கு பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். துவரம் பருப்பு, இளங்கீரை, கத்திரிப் பிஞ்சு பசுவின் பால் நெய் கூட்டவும். அடைப்பு கல்லடைப்பு பதினெட்டு மேகமும் தீரும்.

அண்ட வாதத்துக்கு மருந்து:-

சித்தாமணக்கு கொட்டை எண்ணை, வெள்ள வெங்காயம், கள்ளிப் பால் ஒரு கிளிஞ்சி பிரமாணம் வசம்பு கழச்சிப் பருப்பு இது வெல்லாம் ஒவ்வொன்றுக்கு பாக்களவு அரைத்து தண்ணீரிலே அரைத்து எண்ணையிலே போட்டு காய்ச்சி வெந்த வாறே ஒரு நாளைக்கு ஒரு காசிடை யாக நாலு காசிடை ஏழு நாள் கொள்ளவும் தீரும். பத்தியம் பால், நெய் தவிர்க்கவும்.

சூலை, தலைவலி, அண்டவாதம், பொருமல், சோகை காமாலை கடிகை, தொண்டை வலி, பெருவயறு, குன்மந் சலப் பிளவை துடைவாளை இருமல், காலெரிப்பு மாந்தை பிர மேகம், வயிறு வலி, கண்வலி, கிறந்தி, காச்சல், கூடியரோகம் முகவாதம் சன்னி, மகோதரம் வழிவண்டு கடி, சூடுக் கழிச்சல், பாலில் பிணி, பொருமம் மாந்த பிணி நாவாணர் பாராட்டும் வாக்கண்டத்தின் பண்ணுர மாரு நாலாயிரத்து நானூத்து நாற்பத்தெட்டுடனும் பிணிக்கு மூலி யெனுமன மருந்து கொண்டு நீக்கியே முன்னை வினை தீத்தருளவே குற புக்கமும் பாரரி பாலா வெத்திப் பிரதாபம் வேல் முத்துக் குமார வேலேந்தின முருகையனறது துணையுண்டு.

நிலவாகை பற்பம்:-

நிலவாகை சமூலமும் நிழலிலே உலர்த்தி பொடி செய்து சீலை வடிக் கொண்டு வைத்துக் கொண்டு இப்பொடியை இளநீரில் கலக்கி நல்லெண்ணெயில் தின்ன எலிகடி தீரும். பாலில் குடிக்க திருமேனிப் புழு விழும். மோருடன் குடிக்க கபம் தீரும். கோமியத்தில் குடிக்க சிறங்கு தீரும். ஆட்டு நீரிலே குடிக்க குட்ட வியாதியெல்லாந் தீரும். காடைப் பாலில் குடிக்க கருஞ் செவ்வாப்பு தீரும். எருமை மோருடன் குடிக்க எலிகடி தீரும். எருமை சாணகம் பிழிந்த நீரில் குடிக்க பாண்டு காமாலை தீரும். எருமைப் பாலில் குடிக்க மருந்தீடு தீரும். பாலிலரைத்திட கடி விஷந் தீரும். முப்ப மேனிச் சாத்தில் அரைத்திட தேள் விஷம் மீளும். ~~[illegible]~~

மேத்தலை வாய்வுக்கு:-

தேங்காய் பால் நாழி, ஈர வெங்காயச் சாறு நாழி, எலுமிச்சம் பழச் சாறு நாழி, நல்லெண்ணை நாழி இதுக்கு கடைச் சரக்கு ஏலம் பலம்., லவங்கம் பலம், நற்சீரகம் பலம்., புதகரப்பான் பட்டை பலம்., கடுகுரோகணி பலம், சித்தாமுட்டி, பேரமுட்டி, நன்னாரி கய்யாந்த கரை, பேய்புடல் இது வெல்லாம் பொடி செய்து போட்டுக் காய்ச்சி மெழுகு பதத் தில் இறக்குக் கொண்டு மூன்று நாளைக் ~~கொருக்கால்~~ கொருகால் முழுகிக் கொள்ளவும். மேத்தலை வாய்வு, மண்டைக் கரப்பான் தீரும்.

வாதக் கரப்பானுக்கு மருந்து:-

நத்தைப் பால் உழக்கு, நல்ல நொச்சியிலைச் சாறு உழக்கு, புளியிலைச் சாறு உழக்கு, வெள்ளாட்டுப் பால் உழக்கு, இந்த ஐந்துங் கூட்டி வேக வைத்து வடித்து மேலும் பூசி, உள்ளுக்கு கொடுக்கத் தீரும். கய்யாந்த கரை நாயுருவி கடுக்காய், சங்கு துவளை

நன்றிக அரைத்த எருக்கம் வேர், வேலிப்பருத்தி இவை ஏழும் நன்றி கரைத்து அடை சுட்டு எடுத்துத் தின்ன வாத கரப்பான் தீரும்.

(வேறு)

முப்பது கொம்மட்டிப் பழம் கொண்டு வந்து தலைத்துச் சாறு வாங்கி மிளகு பலம்.உ சுக்கு பலம்.உ, உள்ளி பலம்.உ, வசம்பு பலம்., பெருங்காயம் பலம், இந்துப்பு பலம்.உ, ஏலம் பலம்.உ, காந்தம் பலம் இவை யெல்லாம் அரைத்து சாறுய் கரைத்து காய்ச்சி லேகியமாஞல் இறக்கி வைத்துக் கொண்டு வயிற்றுவலி, வாய்வு, வயிற்று வீக்கம் காமாலை, கொலமுட்டி இதுகளுக்கு சுண்டைக்காய் அளவு தின்னவும். இதுக்கு பத்தியம் கசப்பு, புளிப்பு ஒன்று மாகாது. இளங்கீரை கூட்டவும்.

<u>பல வெக்கைக்கு மருந்து</u> :-

குப்பை மேனியிலை விளாங்காயளவு அரைத்து வசம்பு.க, வெள்ளப் பூண்டு, அசமதாகமும் கூட்டி இடிச்சு ஒரு பொழுது கொடுக்கவும். மறுநாள் அரிசிக் கூழ் காய்ச்சி கொடுக்கவும். எருக்கல் மதில்லாமலிருந்தால் விடத்திரை யிலை, அசமதாகம் கருப்பு கட்டியும் இடிச்சு வென்னீரில் மோரில் கழப்பிக் கொடுக்கவும் கழிச்சல் நிற்கும்.

(வேறு)

எருமை மாட்டுக்கு சீரகம் மிளகும் ஈர வெங்காயம் பலம் ஒன்றுக்கு பழம்புளி, சிறு தேங்காயளவு நல்லெண்ணை கால் சேர் விட்டு பிசைந்து கவாளங் கொடுக்கவும். மை மாணிக்கம் புளியிலை பொன்னுங்கன்னி மூன்றும் வேக வைத்து தண்ணீர் த்திப் போடவும். கடுப்புக்கு தாளியிலை பழம்பாசி காடியில் கொடுக்கவும்.

<u>பசுமாட்டுக்கு</u> :-

பசுவின்பால் குமுனி சீரகம், மிளகு, ஈர வெங்காயம் அரைத்து கரைத்து போட்டி கட்டாமல் விடவும்.

<u>வெக்கைக்கு</u> :-

இலுப்பை நெய் சேர்.க, தாளவிழுதச் சாறு, மிதிபாகல் சாறு சிறங்கை கலந்து கட்டவும். மறுநாள் கம்பரிசி இடிச்சு கூழு காய்ச்சிக் கொடுக்கவும்.

<u>பித்த சுரத்துக்கு மருந்து</u> :-

கண்டங்கத்திரிக் கொத்து, கீழ்வா நெல்லி வேர், இது வெல்லாம் சீலையில் முடிஞ்சி போட்டு பதக்கு தண்ணீர் வைத்து இதுக்கு கடைச் சரக்கு சீரகம், கடுகுரோகணி, திப்பிலி, சுக்கு சீலையில் முடிஞ்சு போட்டு எட்டிலொன்ருய் காய்ச்சி ராத்திரிக்கு கசாயத்தைக் குடிக்க காலமே முடிஞ்ச மருந்தை அரைச்சு கசாயத்தில் குழப்பிக் கொள்ளவும் தீரும்.

<u>மூல வியாதிக்கு</u> :-

சிறுகாஞ் சொறி வேர், பேய்புடல், நன்னரி வேர், தூதுவளை வேர், துளசி வேர் ஐந்தும் சமனாகக் கூட்டி கருஞ்சீரகம், திப்பிலிக்காய் இது முடிஞ்சி போட்டு பதக்கு தண்ணீர் விட்டுக் காய்ச்சி அந்த மருந்து எடுத்து அரைத்துக் கொடுக்கவும். விழுதிச் சாறும் தேங் முலைப்பால், சுக்கு, கோஷ்டம், அசிக்கரந்தம் உள்ளி இந்துப்பு இது வெல்லாம் வெளிச் சாறு. வார்த்து அரைத்து உருண்டை பண்ணி விழுதிச் சாற்றில் கொடுக்கவும்.

<u>சுர உருண்டை</u> :-

நொச்சிக் கொழுந்து ஒரு பிடி பொன் அரிதாரம் விராகனிடை.க, பூண்டுங் கூட்டி ஒரு சாமம் அரைத்து சிறுபயறு அம்மாத்திரம் உருண்டை பண்ணிக் கொள்ளவும். முலைப்பாலில் ஒரு உருண்டை கொடுக்கவும். பிறகு புச்சரிசியும் பயறும் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

தேளுக்கு மருந்து:- உப்பும், வெத்திலையும் நேக அரைத்துப் போடவும். நட்டு வாக்காலிக்கு பிரண்டை அரைத்து தடவவும்.

(வேறு)

ரசம் விராகனிடை.ங, மனோசிலை விராகனிடை.உ, கெந்தகம் விராகனிடை.அ, காந்தம் விராகனிடை.க, அரப்பொடி விராகனிடை.உயஉ இதுவெல்லாம் கத்தாளஞ் சாறு விட்டு அரைத்து அடையாத் தட்டி கலத்தைக் கவிழ்த்து சூரிய புடமாய் முப்பது நாழிகை வைக்க எரிஞ்சு பற்பமாய்ப் போம். அதின் பிறகு ஓமம் பலம்.க, சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, கடுக்காய் பலம்.க, இதுவெல்லாம் பொன்னிறமாய் வறுத்து நேகப் பொடி செய்து வைத்துக் கொண்டு தேனில் அந்தி சந்தி கொள்ளவும். இதில் தீரும் வியாதி உடம்பில் உண்டான வியாதி எல்லாம் தீரும். பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ரத்தின முரு திப்பிலி சேர், செம்பகமும் சிறந்த சுக்கு முப்பது இரண்டு சேர் அமுக்குரு வேர் அன்பு பதினாவுடனே ஆத்தினஞ் சமனாய் ஆரித்தவ் கூட்டே கூட்டி ஒரு விரகடி நாள் கொண்டக் கால் ஆரோசிகமங் குருங்காசம் ஆட்ட வள்ர் சத்தி பித்தம் அன்ன திருள் வாய்வும் மருந்தீடு வன்னி மாந்தந்தேட்டமுடன் குமர கண்டன் சுவாச காசம் சிலேட்டுமமும் உள்ள சுரமும் சேர்ந்த நோய்கள் ஆட்ட வளர் கிராணி முதலான பயித்தியமும் தீரும்.

பூப்பட்ட கண்ணுக்கு மருந்து:-

கீழா நெல்லி வேர், பிடுங்கி விளக்கின் மூக்கில் சுட்டு வெண்ணை கூட்டி நிலத்திலிழைத்து கண்ணிலிட தீரும். நந்தியா வட்டம் அரும்பெடுத்து வந்து இரும்பு காய வைத்து அதின் மேலே பூ வைத்து எலுமிச்சஞ் சாறு விட்டு இழைத்து கண்ணிலிட தீரும். நந்தியா வட்டம் அரும்பெடுத்து வந்து இரும்பு காய வைத்து அதின் மேலே பூ வைத்து எலுமிச்சஞ் சாறு விட்டு இழைத்துப் புறலையம் பசவும். வெள்ளை காக்குட்டான் வேர் பிடுங்கி வந்து மேல் தோல் சீவிப் போட்டு பசுவின் பாலில் அவித்து உருண்டை பண்ணிக் கொண்டு பசுவின் பாலில் உரைத்துக் கண்ணிலிடப் பூ மாறும்.

விரியனுக்கு கடிவாயில் கட்ட மருந்து:- not useful

வரகரிசியும் ஊமத்தங்காயும் வேக வைத்து ~~கடிவாயில்~~ கடிவாய்க்கு மேலே கட்டவும் கடி வாயில் கோழி யீரலைக் கட்டவும். கடி வாய்க்கு அடுத்தால் போலே சீந்தி வேரும் பசலை வேரும் உள்ளி வசம்பு அரைத்துப் பூசவும். இப்படி மூன்று நாள் கட்டின பிறகு சீந்தி வேர் மருந்தைப் பூசவும்.

விரியனுக்கு மருந்து:- விஷவைத்தியம்

முருங்கைப் பட்டை, உள்ளி, வசம்பு, சிறுநீர் கூட்டி உள்ளுக்கு கொடுத்து காதுக்கும் விட்டு உச்சியிலும் விடத் தீரும். பெரிய பெருமாள் சிறுநீர் கூட்டி நருக்கித் துவலையிடவும். உத்தாமணி பாவட்டை சிறுநீரில் துவளை. வெள்ளருகு உள்ளி வசம்பு சிறு நீரில் துவளை. பச்சை நல்ல நாபியும் முள்ளுக் கிளுவைப் பட்டை வேப்பெண்ணெயிலூறப் போட்டு பட்டையும் நாபியும் கூட்டி பொடி செய்து சிமிளிலடைத்து மூர்ச்சை போன பேருக்கு இரண்டு நெறியிலும் மூன்று வாங்கி கொண்டு கீறி மத்திக்கவும். நேர்வாளங் கொட்டை சிறு நீரிலூறப் போட்டு இலுப்பைப் புண்ணாக்குடன் அரைத்து பொடி பண்ணி பொட்டணங் கட்டி வைக்கவும். விஷந் தீண்டினால் சிறுநீர் தோய்த்து நசியம் பண்ணவும். முத்தின கழக்கொட்டி பருப்பு பாக்குடன் சீவிக் கொடுக்கவும். வெத்திலை சுருட்டிக் கொடுக்கவும். இது கை கண்டது. பேய்ப்புடல் சமூலமும் அறபா சலத்தில் கொடுக்கவும் மீளும். முடிமேல் முடியிலையும் வல்லாரையிலையும் சிறு புள்ளடி யிலையும் சிறுநீரில் நசியமிடவும் துவளையிடவும். இது மிருகங்களுக்கும் மனுஷர்களுக்கும் எல்லாத்துக்கும் விஷந் தீரும்.

வண்டு கடிக்கு மருந்து:-

எட்டிக் கொட்டை.ங, நேர்வாளங் கொட்டை.ரு இந்துப்பு பலம்.க, மூன்றுங் கூட்டி அரைத்து மேலெங்குந் துவளை போடவும். மேம்பருத்தியிலை எலுமிச்சங்காய் அளவு வென்னீரில் கரைத்து ஐந்து நாள் கொடுக்கவும். காரம், புளிப்பு தவிர்க்கவும்.

மேல் தலை வாய்வுக்கு மருந்து :-

எலுமிச்சம் பழம் கொண்டு வந்து சத்தே கீறி இரண்டு குண்டுமணி மாத்திரம் அவின் விட்டு சத்து நேரம் வைத்து எடுத்து ஒத்திட தண்ணீரில் விழுகிறதும் கடுப்பும் நிற்கும்.

பூப்பட்ட கண்ணுக்கு மருந்து :-

வெள்ளைக் ~~கக்கரட்டான்~~ காக்கட்டான் வேர் முலைப்பாலிலரைத்து உருண்டை பண்ணிப் போட வும். பூ மாறும்.

கண் வலிக்கு மருந்து :-

not clear

துத்தம் துரிசி எருமை வெண்ணையில் கலத்தோடு கலந்தேச்சி -----
வல கடுப்பு கண்வலி உள்பட நிற்கும். மூன்று நாள் கொடுக்கவும். பாலுஞ் சோறும் உப்புங் கூட்டவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். இதமா முறிக்க இருபது நாளைக்கு பிறகு அழிஞ்சில் வடக்கே போன வேர் வெட்டி வந்து இளவென்னீரில் ஒரு பாக்கத்தனை கொடுக்க வும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

சில தனமம வாசமதிசை முருக மருந்து :-

what does this mean?

not useful

ஜசி மல்லி வேர் ஒரு கட்டு நருக்கி பானையில் அடைத்து நாலு மரக்கால் தண்ணீரில் விட்டுக் காய்ச்சி வேது பிடிக்கவும். கையும் வேதில்த் தண்டமுறக் காட்டி ஆவி போகாமல் பிடிக்க கரசம் தெறிச்சு நிலத்திலே விழும். கூட்டி எடுக்கவும்.

எலுமிச்சம் பழம். க, பசுவின் வெண்ணை ஒரு எலுமிச்சங்காயளவு சட்டி காய வைத்து வெண்ணையை போட்டு உருக்கின பிறகு எலுமிச்சம் பழச் சாத்தை விட்டு இறக்கி ஊத்தி கொடுக்கவும். இப்படி இரண்டு நாள் கொடுக்கவும். ஒரு பொழுதைக்கு உழக்கு. வாகை யிலை பானையிலடைஞ்சு வேது வார்த்துக் கொள்ளவும். அரஞ்சு மாறு பாகமாகப் பிடிச்சு விடவும். உடனே கோழி முட்டையை வெள்ளைக் கருவை ஊத்திப் போட்டு மஞ்சள் கருவைக் கொடுக்கவும். பிறகு உடனே சங்கம் பட்டை வடக்கே போற வேர் வெட்டி வந்து அரைத்து ஒரு விளாங்காயளவு கொடுக்கவும். மூன்று நாள் ஆறு பொழுது கொடுக்கவும். எட்டு நாள் வேது பிடிக்கவும். நாலு நாள் வாகைப் பட்டை வெட்டி வந்து பானையிலடைச் நாலு மரக்கால் தண்ணீரில் விட்டு வேடு கட்டி வேட்டின் மேலே மாவைச்சு நன்றாய் வெந்த உடனே எடுத்து வேது விட்டுக் கொண்டு வெந்த உடனே உழக்கு நல்லெண்ணை விட்டு பிசைந்து தின்னவும். இப்படி மூன்று நாள் தின்னவும். மூன்று முழுக்கு கஞ்சி வைத்து முழுகவும். கடுப்ப நிற்கும். அப்புறம் எந்த எண்ணையும் முழுகவும். வாதகுலைக்கு யீதாம முருக்க சுரத்துக்கு உருண்டை.

(வேறு) சர்வ சுரத்துக்கும் ஏழு நாழிகையில் விட மகா சுரக்கிடுக் குளிகையிது.

? யீதாம கெந்தகம், அரிதாரம், நாபி, சாதிலிங்கம், துத்தம், வெண்காரம், பொன்னூமத்தை விரை இதெல்லாம் சரியாக கூட்டி இஞ்சி சாத்திலரைத்து உழுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில்லர்த்தி தாப சுரத்து இளநீரில் கொடுக்கவும். வாத சுரத்துக்கு பசுவின் பாலில் கொடுக்கவும். ஏழு நாழிகை காச்சல் விடும். மூன்று நாள் மூன்று உருண்டை கொடுக்கவும் காச்சல்விடும். பத்தியம் உப்பு, புளிப்பு ஆகாது.

மகா சுரத்துக்கு குளிகை :-

யீதமா கெந்தகம், அரிதாரம் மூன்றும் மூன்று காசிடை ஊமத்தை விரை காசிடை சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் ஒன்றுக்கு மூன்று காசிடை இதெல்லாம் எலுமிச்சம் பழச் சாத்தல் இரண்டு சாமமரைத்துக் குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி இஞ்சி சாத்தில் இரண்டு உருண்டை இடவும். சர்வ சுரமும் விடும். மாறல் உள்பட வாதபித்தம் சிலேட்டுமம் தீரும்.

சர்ச சுரத்துக்கும் சன்னி வாத சுரத்துக்கும் உருண்டை :-

திரிகடுகு, வெப்பாலைச் சாறு, வார்த்து ஒரு சாமம் அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வெப்பாலைச் சாத்திலிடச் சகலமான சுரமும் சன்னி

சன்னி வாத சுரமுந் தீரும். உடனே எண்ணெ வார்த்து முழுகலாம். இது நாகம்.

<u>பித்த காசத்துக்கு கசாயம்</u>:-

சதகுப்பை, கொத்தமல்லி, அதிமதுரம், ஆடாதோடை யீர்க்கு, முத்தக்காசி, தண்ணி மிட்டான் கிழங்கு, முசுமுசுக்கை வேரு, சுக்கு வெட்டி வேர் சரி கூட்டி கசாயம் கொடுக்க பித்த சுரம் தீரும்.

(வேறு)

வெள்ளிண்டு வடக்கே போற வேர் வெட்டி அரைத்து மூன்று நாள் கொடுக்கவும். எலுமிச்சங் காயளவு கொடுக்கவும். இந்த இலையும் உள்ளி வசம்புந் தலைல யிடவும். பத்தியம் பிடிக்கவும்.

<u>சிவன மருந்து</u>:-

அழிஞ்சி வேர், விழுவி வேர், புழுக் கொல்லி வேர், கருங்கொடி முத்தின தண்டு பட்டைத் தாள் பெருங்காயம் வகைக்கு ஒரு விராகனிடை கூட்டி இடித்து தூள பண்ணி அந்தி சந்தி பத்து நாள் தின்னவும். பத்தியம் பிடிக்கவும். செவ்வட்டை கடிக்கெல்லாந் தீரும்.

<u>பிள்ளை பெறமாட்டாத பேருக்கு மருந்து</u>:-

அவுரியிலையும் வெங்காரமும் அரைத்து உருண்டை பண்ணி இரண்டு உருண்டை காடியிலுரைத்து கொடுக்கவும். பிள்ளை பிறக்கும்.

(வேறு) வெள்ளை பருத்தியிலை அரைத்து ஒரு மஞ்சாடி பெருங்காயம் கூட்டி தொப்புளிலும் வயறு இடுப்பிலும் பூசவும் பிள்ளை பிறக்கும். இது லாட வித்தை.

<u>காஞ்கடி, செவ்வட்டை கடி, செய்யான் கடி நண்டு ஒரு வியாதிக்கு மருந்து</u>:-

கருங்குருவியரிசி.ங, வரகரிசி.ங, மஞ்சள் பொடி.ங, பாலொடுவை வேர்த்தூள்.ங, பெரு மருந்து தூள், வெள்ளறுகு தூள், வெள்ள உருண்டை.யரு, பெருங்காயம் விராகனிடை.ச இது எல்லாங் கூட்டி வஸ்திர காயம் பண்ணி அந்தி சந்தி இரண்டு பிடி பத்து நாள்க் கொள்ளவும். பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும். முருங்கைகாய் நெடுநாளில் விசாதி நிற்கும். மறுபத்தியம் பிடிக்கவும்.

<u>சகல வாயுவக்கும் சகல சில் விஷங்களுக்கும் மருந்து</u>:-

சமுத்திர பழம் மூன்றுக்கு உலத்த வெண்நொச்சியிலை பருக்க ஒரு பிடி கூட்டி இடித்து வச்சிர காயம் பண்ணிக் கொண்டு விஷங்களுக்கும் வூளறிந்து வெருகடி பிரமாணம் இளவென்னீரில் கொள்ளவும். ~~பத்தியம் கசப்பு புளிப்பு தவிர்க்கவும்~~ இது சன்னியள் சலவை சயித்தியம் வாய்வு இதுகளுக்கு எல்லாம் அநுபானம் விசேஷங்களிலும். நன்று.

சமுத்திரபழம்: <u>கண காசத்துக்கு தலை வலிக்கு</u>:- சமுத்திரப் பழம் முலைப் பாலில் அவித்து நிழலுலர்த்தி கண்ணில் பூசவும். கண்ணில் காசம் முதலானதுக்கு உப்பை மேனிச் சாத்திலுரைத்து இடவும். தீராத தலைவலிக்கு முலைப் பாலிலுரைத்து நாசிக்கு இரண்டு மூன்று துளி நசியம் பண்ணவும்.

<u>வயிற்றுக் கட்டி, வாய்வுத் திரஷ்ச்சி முதலான உதிரரோகம் அஜீரண முதலானதுக் கெல்லாம் மருந்து</u>:-

பிரண்டை முக்குறுணிக்கு உப்புக் குறுணி இதை எருமை மோர் நாழி மோரில் போட்டு ஊற வைத்து தினம் அதை வெய்யிலிலே உலர்த்தி திரும்பவும் மோரில் போட்டு நாள் தோறும் இந்தப் படி உலர்த்தி அந்த மோரிலே எடுத்துப் போட்டு வைத்து அந்த மோரெல்லாம் சுவறினவாறே அதை நன்றாய் உலர்த்தி இடித்துச் சூரணம் வஸ்திர காயம் பண்ணிக் குடுக்கையிலடைத்து வெரு கடி வென்னீரில் முன் சொன்ன ரோகங்களுக்கெல்லாம் கொடுக்கவும் தீரும். நன்று.

மூக்காலே ரெத்தம் விழுகிறதுக்கு பெரும்பாடுக்கு:-

உச்சிதம் திரும்பக் கல்லுலே உரைத்து அத்தோடே சர்க்கரை தேன் கூட்டி பசுவின் பாலோட்டே குழப்பி மூக்கிலே நசியம் பண்ணவும். நிற்கும். சிறுகீரை வேரும் கற்கண்டும் பெரும் பாட்டுக்கு உச்சிதம்.

எலுமிச்சங் காயளவு அதிமதுரத்தை அரைத்து அவ்வளவுக்கும் சர்க்கரை கூட்டி இரு பச்சரிசி கழனியில் உடனே கொடுக்கவும் நிற்கும்.

கருமுள்ளிக்காய் கொண்டு வந்து சத்து கருக்கி இரண்டு படி காய்க்கு புட்டு வைத்து புழிந்து கொண்டு அந்த தயிலம் ஒரு கலசத்தில் வைத்து அதில் கருஞ்சீரகம் பொடி பண்ணிப் போட்டு அந்தி சந்தி கொள்ளவும். இதுக்கு இருமல், சுவாச காசம் நிற்கும்.

தலைவலிக்கு மருந்து:-

எருக்கம் பால் குடத்தில் வண்டல் யீங்குறுனி மஞ்சள் இது அரைத்து இரண்டு நெறி யிரும் போடவும் நிற்கும். கை கண்டது.

பீனிச் சுவாசத்துக்கு எண்ணை பண்ணும்படி:-

நல்லெண்ணை சேர்க்கு மருந்து ஏலம், இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, செண்பகப்பூ, கஸ்தூரி மஞ்சள் சேவுகனர் கிழங்கு வகைக்கு விராகனிடை.உ, சேவுகனர் கிழங்கு பலம்.ரு இந்தப்படி பதத்தில் வடித்து முழுகவும். இது கை கண்டது. இதுக்கு பீனிசம் ஒன்பதும் தீரும். சுவாசம் இருமல் நிற்கும். கை கண்டது. இதுக்கு நசியம் வேளைவேர், நசிங் நசியம் காதில் குத்தவும். பக்கம் மாறிக் குத்தவும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். கை கண்டது.

வர்தம் ஏன்பதுக்கும்:-

சனல் விரை வசம்பு காணு மக்கதோர் பன்னை ஆமணக்க வித்து புகழதகு வே வேப்பம் வித்து மன்னிய மிரு வித்துவான கழுக்கொட்டைப் பருப்பு தென்னங்காய் புங்கம் வித்து சிறந்ததோரிலுப்பை வித்து பன்னிய பருத்தி வித்துப் பாலுடன் ஒக்கக் கூட்டி தக்க தோர் நாற்த்தை கோட்டமே.

வாய்வுக்கு பறங்கிப் பட்டை லேகியம்:

பறங்கிப் பட்டை பலம்.உ, சுக்கு பலம்.உ, சீரகம் பலம்.உ, முசுமுசுக்கைச் சாறு நாழி.க, வல்லாரைச் சாறு நாழி.க, பொற்தலைச் சாறு நாழி.க, குமரிச் சாறு நாழி.க, எலுமிச்சை நாழி.க, ஊறப் போட்டுக் காய வைத்து சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு தினம் விராகனிடை தூள் வைத்து அரை விராகனிடை சர்க்கரையும் பசுவின் நெய்யும் சேர்த்து அரை மண்டலம் சாப்பிடவும் வாய்வு, வயிறு உப்பிசம் இதுகள் தீரும். பத்தியம் இச்சா பத்தியம்.

கண்ணுக்கு பச்சை உருண்டை:-

வங்காளப் பச்சை, மஞ்சாடி தலை ஒடு, சங்கு பொடி தூரியிது ஒரு அளவு எலுமிச்சம் பழம் சாத்திலரைத்து கண்ணிலிடவும். குத்தம் படலமறுகாய் ரோமுது வெள் ளெழுத்து சுத்துக் கிடவும். சத்து கோலத்து கண்ணுக்கு முலைப் பாலிடவும்.

செவ்வட்டை கடி, மூஞ்சூறு கடி, குட்டம், விரியன், தேள், அரணை கடி பேய்நாய் கடி, மத்து மகிழ் தன்னுடன் அமுக்கி நேர்வாளம் வளமான என் குன்றியும் வகை நாலு வித்துடன் பொன் மொழுமுதில் லையின் புழுக்குத் கெவுரியும் முத்து வள நாரத்த வடச் சார் முறிகுடுகு மூறு பச்சையும் முதகெந்தக மிரதமென்ற மூன்றுகி எலுமிச்சம் பழச் சாத்திலே வொரைத்த் நாள் அரைத்து வைத்து வெய்யில் தனில் வாப குவித்த பீங்கானில் வளமாக அடைத்து வைத்து பதினெட்டு விஷமந் தலைக் கொண்டு மயக்கமுத்திடும் நாளிலே நித்த மொரு பணவிடை வெத்திலையிலே தின்ன நிகரில்லை யென்ற கடி போம். நீங்காத செவ்வட்டை கடியுடன் குட்டமும் நில்லாது பொடி படுத்தும் முத்து விரியன் கடி தேலை கடி

யருணை கடி மூன்றும் கடி பேய் நாய் கடி முன்று விப்புருதி எலி கடி சகல விஷமெல்லா
மிரிந்தோடிடுங் கொத்திமே கட்டிக்குத்த மருந்தைக் கொடிக் கடி விஷக்கலாம் கோல
மிகு கானியுடனும் மக தேவர் குருபரமமத்தப்படியே.

<u>வங்க செந்தூரம்</u> :-

காரீயம் பலம்.௨௰, பசுவின் கோமியத்திலுருக்கிச் சாய்த்து பின்பு சட்டி காய
வைத்து பதினைந்து காசிடை அவின் மருந்தும் ஒரு பலம் வெடியுப்பும் சிவக்கும் தனிலும் வழக்க
வும். சிவந்த பிறகு எடுத்து அதுக்கு அனுபானம் செந்தூரம் பணவிடைக்கு வெருகடி வங்காளச்
சுனியும் வெருகடி நற்சீரகமும் பசுவின் (நெய்யும்) இரண்டு நேரமும் இருபது நாள் கொள்ள
வும். கிறச்சனம்.௰௮, கல்லடைப்புள்.௰௮, உட்டிரோகம்௱௨ பித்தரோகம்.௱௨௰௮ சகனகுபதம்
தீரும்.

<u>பாண்டுரோகத்துக்கு மருந்து</u> :-

சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம் ஜீரம், அரப்பொடி அக்கிரக் காரம் ஊசிக்
காந்தம் உள்ளி வகை ஒன்றுக்கு மருந்து பலம்.தெ, பச்சிலை வகை அவரியிலைச் சாறு,
குத்தமல்லிகைச் சாறு, பிறமிச்சாறு, கீழ்க்காய் நெல்லிச் சாறு, கரிப்பான் சாறு படி.௧,
எலுமிச்சம் பழம்.௨௰ நல்லெண்ணை படி.௧, லேகியம் பண்ணவும். பத்தியம் <u>திருக்கை மிவிறு</u>
மீன் மிளகு கூட்டவும். பாண்டு ரோகம் தீரும்.

<u>வாதமென்னப்பட்டதுக்கெல்லாம் மருந்து</u> :-

சாறணை வேர், முடக்கொத்தான் வேர், வீளி வேர், வாதமடக்கி வேர்,
எருக்கம் வேர், ?<u>காதகட்டி</u> வேர், குட்டிக் குமுள் வேர், அஞ்சிலை நொச்சி வேர், செங்
கத்தாரி வேர், <u>வெள்ளடம்ப வேர்</u>, கருங்காலி வேர் அகில் வேர் தயிலம் பண்ணவும்.
முழுகவும் தீரும்.

<u>காது செவிட்டுக்கு மருந்து</u> :-

அத்திப் பட்டையும், பாகல் விரை, வேப்பங் கொட்டையும், சங்கு வேளைப்
பொடியும் வலம்புரிக்காய், தாளை கிழங்கு, செண்பகப்பூவு நல்லெண்ணை விளக்கெண்ணை நெய்
யும் கொதிக்க வைத்து காதில் விடவும் கேட்கும்.

<u>வயிற்று வரட்சிக்கு மருந்து</u> :-

கொம்மட்டிக்காய்ச் சாறு, பசுவின் பால் வெங்காரம் விராகனிடை.௰,
இந்துப்பு விராகனிடை.௰, நவாச்சாரம் விராகனிடை.௫, திப்பிலி விராகனிடை.௭,
சுக்கு விராகனிடை.௩, காயம் விராகனிடை.௰௩, உள்ளி பலம்.௨, கல்லுப்பு விராகனிடை.௫
நல்லுப்பு ஒரு சிறங்கை வெல்லம் பலம்.௫ இந்தச் சாறும் பாலுங் கூட்டி வேக வைத்து இந்த
மருந்தெல்லாம் அரைத்துப் போட்டு கரண்டி போட்டுக் கிண்டி லேகியமாகச் செய்து
அறக்கி வைத்து ஒரு கலசத்திலெடுத்து வைத்துக் கொண்டு ஒரு பாக்கு அளவு தின்னவும்.
இதுக்கு பத்தியம் மோருஞ் சோறும் கொடுக்கவும். தீரும் வியாதி வயிற்று வலி, வாய்வு,
பொருமல், வயிறைச்சல் எல்லாந் தீரும்.

<u>விஷத்துக்கு மருந்து</u> :-

நாவி வெள்ளைப் பாஷாணம் சூதம் கந்தகம் தரிசி நேர்வாளம் இது வெல்லாங்
கூட்டி அரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொள்ளவும். எந்த விஷத்துக்கும்
ஒரு உருண்டை நல்லெண்ணை சேர்த்து சிறங்கை தண்ணீரில் கொடுக்கவும் தீரும். சாறணைச்
சாத்தில் கொடுக்க மூன்சுறு கடி தீரும்.

<u>இருமலுக்கு மருந்து</u> :-

கடுக்காய், தானிக்காய், இந்துப்பு, திப்பிலி, பேய்ப்பீர்க்கு, வேலிப்பருத்தி
எருக்கம் பழுப்பு சாறணை வேர் இது வெல்லாம் உணர்த்திச் சூரணம் பண்ணி பசுவின் நெய்யில்
கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி ஈளை இருமல் தீரும்.

கபால மண்டை இடிக்கு மருந்து :-

கருஞ்சீரகம் விராகனிடை.ய, முயல் புழுக்கை விராகனிடை.ரு இந்த இரண்டு மருந்தும் பொடி பண்ணி வெள்ளிய சீலையிலே ட்டி நாசியில் புகை விடவும் தீரும்.

பீனிசத்துக்கு மருந்து :- வாசிச்சாறு சிறுநீரும், நாசியில் நிறுத்த நிற்கும். இது கை கண்டது.

இருமலுக்கு மருந்து :-

அரிதாரம் அரைக் களஞ்சி கொண்டு ஆடாதோடைச் சாறு விட்டு அரைத்துச் சீலையிலே ட்டி திரியாக்கிக் கொண்டு துண்டாக நறுக்கி ஓலை கொண்டு சுருட்டிப் புகை குடிக்கவும். ஆட்டுப் பால் காய்ச்சிக் கிட்ட வைத்துக் கொண்டு சத்தே குடிக்கவும். அப்படி மூன்று நாள் குடிக்கவும் தீரும்.

ஒரு தலைவலிக்கு மருந்து :-

பருத்தியிலைச் சாறு மேனிச்சாறு சரியாய்ப் புழிந்து கொண்டு ஒரு சட்டியிலே வத்தி அதிலே சுண்டங் கத்திரி விரையும் நவாச்சாரமும் சாத்திலே ஊற வைத்துக் கொண்டு எடுத்து தூள் பண்ணி நாசியிலே வாங்க வழலை யெல்லாம் வாங்கிப் போகுமே.

வயிற்றுக் கடுப்புக்கு மருந்து :-

ஏலம், கிராம்பு, சாதிக்காய், நற்சீரகம், விலாமிச்சம் வேர், இலந்தை வேர், பழம்பாசி வேர், இது வெல்லாம் எருமைத் தயிரில் கொடுக்கவும். ஓமம் பொரித்து சோறு நல்லெண்ணெயில் சாப்பிடவும் தீரும்.

பிள்ளையுண்டாக மருந்து :-

தேவி கடாச்சம் பரதேசிக்கு அன்னங் கொடுத்து மருந்து செய்யவும் பலிக்கும் மருந்து :- பாகல் இலைச் சாறு உழக்கு, தட்டளவு நல்லெண்ணெயும் மூன்று நாள் கொடுக்கவும். பின்பு அமுக்கிறுவேர் அரைத்து பசுவின் பாலில் ஏழு நாள் கொடுக்கவும். முடக் கொத்தான் இலை ஒரு பிடி கள்ளிப் பால் ஒரு களஞ்சி அரைத்துப் பசுவின் நெய்யில் எரித்து பத்தாமல் வடித்து கொள்ளவும் மூன்று நாளைக்கு கழியும். நாலா நாள் செங்கமங்கலாய் கழியும். அப்பால் புச்சி விழும். மருமாதம் கெற்பந் தரிக்கும். தப்பாது.

வயிற்று வலி திரட்சிக்கு மருந்து :-

சூதம், வெங்காரம், இந்துப்பு, நேர்வாளம், காயம், கடுகுரோகணி வகைக்கு விராகனிடை.க எடுத்து அஞ்சிலை நொச்சிச் சாறு வார்த்தரைத்து நாற்த்தங்காய் வளைய மாக அறுத்து அரைத்த மருந்தை திமிர்ந்து சிறு கலையத்திலிட்டு பசுவின் கோமியம் விட்டு சில்லுப் போட்டு சீலை மண் செய்து எருக்குப் படையில் புதைத்து ஐந்தா நாள் எடுத்து விளக் கெண்ணெ விட்டரைத்துப் பாக்களவு தின்னவும். இது இருபது நாள் தின்றால் வயிற்று வலி கட்டி திரச்சி எல்லா வியாதியும் தீரும்.

கெறந்தை வெட்டை அரையாப்புக்கு மருந்து :-

பறங்கிப்பட்டை பலம்.ய, சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, கைச்சோலம், சடாமாஞ்சி, செவ்வள்ளிக் கொடி, கோரோசானி ஓமம், வால்மிளகு, வாய்விளங்கம், கண்ட திப்பிலி கோஷ்டம், கடுகுரோகணி அதிமதுரம், காயம், லவங்கப் பட்டை, கடுக்காய்.ருய, தானிக்காய்.ருய, உள்ளி கண்டங்கத்திரி தூதுவளை நிலவாகை ஆடு தின்னாப்பாளை, கரிப்பான், சிவனார் வேம்பு, சித்திரமூலம், சங்கங்குப்பி, புவரசம் பட்டை, பற்படாகம், விஷ்ணுகாந்தி, செங்கத்தாரி சங்க வேர், சாறணை வேர், வெள்ளருகு முளகறணை வேர் இது வெல்லாம் உணர்த்தி இடித்து கடை மருந்து எல்லாம் இடித்து வடி கட்டிக் கொண்டு சரி சமகை நிறுத்தி சர்க்கரை பலம்.ரு, கலந்து புதுப் பாண்டத்தில் வைத்துக் கொண்டு கொள்ளவும். இச்சா பத்தியம். இதுக்கு சகல வியாதியும் தீரும்.

மூலை கடுப்புக்கு மருந்து :- விடத்தோரையிலை இலை எருமைத் தயிரில் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது.

வாதத்துக்கு எண்ணெய் :-

நல்லெண்ணை, சித்தாமணக்கெண்ணை, எருக்கிலைச் சாறு, துளசிச் சாறு, இலுப்பைச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, நொச்சிச் சாறு, தாளைச் சாறு பாவட்டஞ் சாறு, வாதமடக்கிச் சாறு, முடக்கத்தான் சாறு, தலை சுருளிச் சாறு, வசம்பு விராகனிடை, உள்ளி பலம்.௩, அரைத்துப் போட்டுக் கரைத்து பதத்தில் வடித்து முழுகத் தீரும்.

செவிட்டுக் காதுக்கு மருந்து :-

சமுத்திரப் பழம், பெருங்காயம் அரைத்துக் காதில் புழியவும். காது கேட்கும்.

விஷத்துக்கு மருந்து :- not useful

தலைச் சுடி வள்ளி வேர் வட்டத் துத்தி வேர் வெத்திலை வேர் இது வெல்லாம் மிளிச மாடித் தலையில் கட்டவும். பாம்பு விஷம் ஏறாது.

பிரமியத்துக்கு மருந்து :-

பசுவின் நெய் ஒரு சங்கு நல்லெண்ணை அரை சங்கு பசுவின் பால் உழக்கு விளாமிச்சை எலுமிச்சங் காயளவு கூட்டிப் பனியில் வைத்து மூன்று நாள் கொள்ளவும்.
மருந்து :- எலுமிச்சம் பழச் சாறு உழக்கு, பசுவின் பால் ஆழாக்கு நல்ல வெல்லம் வன்னியிலை இரண்டும் எலுமிச்சங் காயளவு அரைத்து மூன்று நாள் கொள்ளவும்.

எண்ணை :- நல்லெண்ணை, சித்தாமணக்கெண்ணை எருக்கிலைச் சாறு, துளசிச் சாறு இலுப்பைச் சாறு, எலுமிச்சம் பழச சாறு நெருஞ்சிச் சாறு, தாளைச் சாறு, பாவட்டைச் சாறு, வாதமடக்கிச் சாறு, முடக்கொத்தான் சாறு, தலை சுருளிச் சாறு, வசம்பு பலம்.௩, உள்ளி பலம்.௩, அரைத்துப் போட்டுக் கரைத்து பதத்தில் வடித்து முழுகத் தீரும்.

நீர்க் கடுப்புக்கு மருந்து :-

கருவேப்பிலை தண்ணீரில் காய்ச்சிக் குடிக்க நீர்க் கடுப்பு நிற்கும்.

இருமலுக்கு மருந்து :-

சிவனார் வேம்பு, எலுமிச்சம் பழச் சாறு, அரைத்துக் கொடுக்கவும்.

காதில் வெளிச்சிக்கு மருந்து :-

தும்பை இலையும் உள்ளி, வசம்பும், நல்லெண்ணையில் கொதிக்க வைத்து விடவும் காதில் விடவும்.

பசி எடுக்கும் போது :-

பெரு மரப்பட்டை, சங்கு குப்பியிலை மிளகு, சீரகம், வசம்பு, உள்ளிமிளகும் பொன்னிறமாக வறுத்து இது வெல்லாம் அரைத்து அடை சுட்டு தின்னவும். பசி எடுக்கும்.

மூலக் கிராணிக்கு மருந்து :-

கருங் கோழி மயிர் போக்கி கீறி யரிந்து கொண்டு முள்ளிக்காய் விரை தூரம் போகாமல் எடுத்துக் கொண்டு மஞ்சள் மிளகு, உள்ளி, கடுகு துத்தம் துரிசி அரைப்பலம், கூட்டிக் கறியில் பிசறி அவித்துக் கொண்டு மூன்று நாள் ஒரு சிரங்கை தின்னவும். மூலம் குட்டம் சோதினை.

(வேறு) கிராம்பு, காயம், ஈசுர முலி கிழங்குடன் நன்னாரியும் சாறணைக் கிழங்குடன் முன்னை விலாமிச்ச வேர் சித்த முட்டி முத்தக்காசுடன் தென்னங் குரும்பையும் புழுகு சட்டமும் மஞ்சத்தி வேருடன் நத்தைச் சூரியும் நெருஞ்சியும் அமுக்கிரு வேரும் இது வெல்லாம் சரி நிறையாகக் கூட்டிக் கடை மருந்து இரண்டு காசிடை கூட்டி வெள்ளாட்டுப் பால் வார்த்து அரைத்து வனமூலிக் கசாயம் வைத்து நல்லெண்ணை வேப்பெண்ணை சித்தமணக்கெண்ணை தேங்காயெண்ணை இலுப்பை எண்ணை இந்த வனமூலிக் கசாயமுங் கடை மருந்து அரைத்து எண்ணையில் போட்டு மூன்று நாள் உமித் தனலிலே வைத்து நாலா நாள் வடித்து உள்ளுக்கு காசிடையில் பாதி கொடுத்து மேலுந் தவாலை யிடவும். தலையிலிடாமல் சர்வ அங்கமும் பூசவும்.

இதுக்கு தீரும் வியாதி சந்துவாதம், சர்வ வாதம், ரெத்த சுரோணித வாதம் ஒரு தலை வலியும் நீர்க் கோழி வாதம், சந்திர வாதம், தயமு வாதம் சன்னி வாதம், கண் சுழல் வாதம், சொப்பிடரியில் சுத்திய வாதமும் முதுகில் பிடிக்கு முயன்றெலி வாதமும் ஆணப் பண பொல்லும் அசந்திடு நடுக்க வாதமும் நமோசனி வாதம், மூர்சை சூலை, முகசன்னி வாதம், சூரிய வாதம் தீரும்.

(வேறு) கல்லுப்பு அரைத்து உருண்டை பண்ணி நல்லெண்ணெயில் வறுத்து வேளை வேரும் உள்ளியு அரைத்து விளக்கிலே வாட்டி தயிலம் பிழிந்து அந்த உருண்டையைக் கொடுத்து பிறகு தயிலத்தைக் கொடுக்கவும் தீரும். (சோதினை.)

<u>வாதக் கடுப்புக்கு மருந்து</u>:-

வேப்பெண்ணெயாவது நல்லெண்ணெயாவது முடக்கொத்தான் விரையும் ஆமாக்கு மயிலிறகு கண்டியை நருக்கி அந்த விரையில் கூடப் போட்டு முடிந்து அந்த எண்ணெயிலே போட்டு சட்டி கவுழ்த்து சீலை மண் செய்து ஒரு விறகாக்க் போட்டு பய்ய எரித்து பொறுத் போனதின் பிறகு எடுத்துப் பூசமுடக்கு வாதந் தீரும்.

<u>பீனிசத்துக்கு மருந்து</u>:-

வெள்ளாட்டுப் பால் இஞ்சிச் சாறும் மஞ்சள் சாறும், நொச்சில்ச் சாறும், காத்தொட்டிச் சாறு, கைய்யாந்த கரைச் சாறு, ஊமத்தஞ் சாறு, கஞ்சா சாறு மிறட்டப் பழச் சாறு எருக்கம் பழுப்புச் சாறு, வெங்காயம், கோஷ்டம், அதிமதுரம் ஏலம், செண்பகப்பூ, கருஞ்சீரகம், வசம்பு, வெருத்தைப் பிசின் அரத்தை இது வெல்லாம் எண்ணெயில் விட்டு மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு அதுக்கு மேல் மருந்து மிளகு விராகனிடை.ருய, அவின் விராகனிடை.அ, ஒன்று இரண்டாய் பொடி பண்ணி துணியிலே முடிந்து எண்ணெயிலே போட்டு ஐந்து நாள் நெல்லுக்குள்ளே வைத்து எடுத்துக் கொண்டு முழுகவும். நாலு முழுக்கிலே குணமாம். கை கண்டது. ௨

இதுக்குத் திரி: சாதிலிங்கம் சுண்ணம்பும் அரைத்து இலையில் தடவிக் காஞ்ச பிறகு திரியா உருட்டி நூல் கொண்டு சுத்தி கொளுத்தி புகை நாசியில் ஏத்தவும் தீரும். பத்தியம் கசப்பு புளிப்பு தள்ளவும்.

<u>உதிர வாந்தி ரெத்த பித்த க்ஷயரோகத்துக்கு மருந்து</u>:-

அருகம் புல்லு, தண்ணீர் முட்டான் கிழங்கு, துவச்சி சாறு படி.ரு, கரப்பான் சாறு, நசித்து கிழங்கு முசுமுசுக்கை தாழை விழுது பூசணிக்காய் வாழைக்கிழங்கு, தேன் தான் விரை, சிறுகீரை, பொன்னாங்கண்ணி, நெருஞ்சி ஓரிலைத் தாமரை ஏலம், இலவங் கம் நன்னாரி வேர், சந்தனம், விலாமிச்ச வேர் இது வெல்லாம் சரி நிறை கூட்டி இடித்து நெய் ஒரு படி பால் ஒரு படி கூட்டி எரித்துப் பதத்தில் வடித்து மேல் மருந்து மிளகு விராகனிடை.ய, சுக்கு விராகனிடை.ரு சர்க்கரை விராகனிடை.40, விட்டு உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி எட்டு நாள் கொடுக்கவும் தீரும்.

<u>பெரு வயத்துக்கு மருந்து</u>:-

கடுக்காய் நூசு பொடி செய்து சீலை வடி கொண்டு துந்தம் பதினைந்து கழஞ்சு பொடி செய்து சேத்து துட்டிடை கொடுக்கவும் தீரும். கை கண்டது.

(வேறு)

கொடிவேலி வேர், புங்கம் பட்டைச் சாறு புங்கயிலைச் சாறு, ஆடு தின்னாப் பாளைச் சாறு பூளையிலைச் சாறு வெல்லம் உரு உருண்டை இந்தப் படிக்கு எண்ணெ வடிக்க வும். பத்தியம் ஒன்று மாகாது. மறு பத்தியம் உப்பு வறுத்துக் கூட்டவும். பசுவின் பால் விட்டு உப்பு அரைச்சு உப்பு வில்லை தட்டி வைத்து கிடவும். ஒத்தடம் கொடி வேலிவேர், சதிரக் கள்ளிச் சாறு, தேங்காய் திருவி இந்த மூன்றும் பொட்டணம் கட்டிக் கொண்டு வேப்பெண்ணை சட்டி காய வைத்து ஒத்தடம் போடவும்.

அதிஅல் கண்டுப்பு கரையாத போஅல் உள்ளி வசம் வெல்லம் புண்டு கொடிவேலி, வேர் என்ணெயில் போட்டு எரிச்சு போடவும் தீரும்.

கருஞ்சீரகம், மஞ்சள், பூதகரப்பான் பட்டை, திப்பிலி, குப்பமேனி, செம்பயிலை, வசம்பு வெள்ளப் புண்டு வலம்புரிக்காய் ஈர வெங்காயம், கடுக்காய், மிளகு சாறணை வேர், சங்கம் வேர், முக்கறட்டை வேர், பூவரசம் பட்டை என்ணை பண்ணவும். நல்லென்ணை யாவது விளக்கென்ணையாவது செய்யவும். தீக்குத்தி நோவு தீரும்.

<u>கிறந்திக்கு மருந்து :- (புகை போடவும்)</u>

லிங்கம் விராகனிடை.உ, எருக்கின் வடக்கே போற வேர் வெட்டி விராகனிடை.ச இது இரண்டும் சேர்த்து அரைத்து தேத்தான் கொட்டைப் பிரமாணம் வில்லை செய்து காயப்போட்டு சுங்கானில் வைத்து மூன்று நாலு நாறு பொழுது ஒரு வில்லை வீதம் வைத்துப் புகை உள்ளுக்கு இறக்கவும். (பத்து கண்டுப்பு)

(வேறு) சாதிலிங்கம் விராகனிடை.ரு, ரசகற்பூரம் விராகனிடை.ரு; எலுமிச்சம் பழச்சாறு கத்தாழஞ் சாறு, சங்கம் பழச் சாறு இந்த மூன்று வகைச் சாத்திலே (உண்டுக் கெண்டத் தாளும்) இந்தச் சாறு விட்டு இந்த சரக்கு வகையை வேறே வேறே அரைத்து உருபடி உண்டாய சேத்தும் படிக்கள்ளே வைத்து மேலம் படி மூடி சீலை மண் செய்து குழி தோண்டி வைத்து இரண்டு விராட்டியில் புடம் போட்டு எடுக்க கட்டிப் போகும். இதுக்கு தீரும் வியாதி சன்னி சுரம், வாய்வு பக்க சன்னி, சூலை சிலேட்டுமம், தொழும் வாதம் வாயு கடுப்பு இருமல் ஈளை பிடறி யிசிவு கால் கையில் குத்தல் கடுப்பு பித்த வாய்வு நெஞ்சிப் பளபளப்பு யிவலு வாய்வு பேதி யிவ்வெல்லாம் தீரும். Not clear

<u>பவள பற்பம் :-</u>

முத்தம் பவளம் விராகனிடை. ரு, கொண்டு வந்து பசுவின் பாலில் ராவைக்கு ஊறவைத்துக் காலமே எடுத்து பச்சை சலம் விட்டுக் கழுவிப் போட்டு சின்ன கலசத்தில் அடைத்து பசுவின் பாலில் விட்டு வாய்க்குச் சில்லுப் போட்டு மூடி, உயக. முட்டியில் புடம் போட்டு வெந்து வரும் போது திறந்து பார்த்து இரண்டு விராகனிடை ரசகற்பூரம் அதிலே போட்டு மறு சில்லுப் போட்டு மூடி மூடின உடனே எடுத்து ஆற வைத்து சிமிளிலே வைத்துக் கொண்டு சங்கம் வேர் நிழலில் உலர்த்தி பொடி பண்ணி வைத்துக் கொண்டு கொடுக்கிற போது சங்கம் வேர்த் தூள் விராகனிடை.க, பவள பற்பம் ஒரு பணவிடை சேத்து யெந்திக்கும் கொடுக்கத் தீரும். கிரந்தி அரையாப்புக்கு கருப்புட்டியில் கொடுக்கவும். மத்த வாய்வுகளுக்கு சங்கம் வேர்த் தூள் கூட்டிக் கொடுக்கவும் தீரும்.

<u>கிறந்திக்கு புகை மருந்து :-</u>

சாதிலிங்கம், சங்க வேர், இரண்டும் பொடி செய்து ஒன்றாகச் சேர்த்து சீலையில் முடிந்து பீங்கானில் வைத்து புகை குடிக்கவும் தீரும்.

<u>அண்ட வாதத்துக்கு மருந்து :-</u>

ஊழலாத்தி வடக்கே போற வேர் வெட்டி வந்து தேங்காய்ப் பால் விட்டு அரைத்து மூன்று நாள் கொள்ள தீரும். அண்ட வாதம் தீரும்.

<u>கண்ணு சிலந்தி, கண்ணு பூ, கண்டமாலை சிறங்கு இதுக்கு மருந்து :-</u>

எருமை மாட்டு கடவாய் பல்லு எடுத்து வந்து சுட்டு அரைத்து விளக்கென்ணெயில் குழப்பிப் பூச ஆறிப் போம்

விநோத மருந்தீடு மருந்து :- கறுத்த ஆமை பஞ்சாங்க எலும்பு தன் மூத்திரத்தில் அரைத்து சூரணம் பண்ணி இடச் சென்மம் அதிகரிக்கும். பிரியாள் பிரிந்தால் பிறணை விடுவாள். விநோதம்.

<u>குசவன் சூளைக்கும், கொல்லன் உலைக்கும் மருந்து :-</u>

மாதளம் பட்டையும், தம்பலப் பூச்சியும் அரைத்து கையில் குழப்பிக் கொண்டு கரியிலே தடவிக் கொல்லன் உலையிலே போடவும் இரும்பு வேகாது. இதுக்கு வித்து

பழங்கூரை வைக்கல் கையால் கசக்கிப் போட இரும்பு வேகும். இதைக் குசவன் சூளை யில் இந்தப்படி போட வேகாது. இந்தப் படி கசக்கிப் போட வேகும்.

குசவன் சூளைக்கு பொரிச்ச கோழி முட்டை தோலும் பன்னம் பழஞ் சாறு விட்டு அரைத்து மாட்டுக் கொம்பில் சிமிழுக்குள்ளே வைக்கப் பானை வெடிக்கும். இதுக்கு மாத்து பழங் கூறை வைக்கல் கையால் கசக்கிப் போடவும் வெடிக்காது.

பேதிக்க வைக்க மருந்து :- 4.2.63.

சுத்தம், அரிசி, பொடி பண்ணி எலுமிச்சம் பழம் கொண்டு வந்து முள்ளாலே குத்தி யித்தூ ம் செலுத்தி ராத்திரிக்கு பனியில் வைத்து காலையிலே எடுத்து பச்சைப் புழு தடவி மோந்து பார்க்கப் பார்க்க பேதியாகும். போதுமென்றால் பழத்தைக் கீழே வைத்துப் போட்டு கையை நல்லாத் தேய்ச்சுக் கழுவிப் போட்டுக் கை முகர்ந்து முகர்ந்து பார்க்கப் பேதி நிற்கும். மோருஞ் சோறும் சாப்பிடவும். பேதி மட்டுக் கட்டும்.

சாதிலிங்கம் செந்தூரம் :-

சாதிலிங்கம் விராகனிடை.க, செருப்படிச் சாறு விட்டு நாலு சாமம் அரைத் து கழஞ்சியிடையாய் வில்லை பிடித்து ஒரு சட்டியில் மட்டிக் கிளிஞ்சி சாம்பல் நாழி சட்டியில் போட்டு வில்லை வைத்து மேலும் நாழி சாம்பல் போட்டு மூடி காலே அரைக் கால் படி தண்ணீர் விட்டுச் சட்டி கொண்டு மூடி நாலு நாழிகை ஆற விட்டு எடுத்தா பூரண சந்திரோதயம் போலே இருக்கும். எடுத்துக் கொண்டு முத்தின பூவரசம் பட்டை வெட்டி வந்து கசாயம் வைத்து அதில் ஒரு பணவிடை செந்தூரம் வைத்துக் கொடுக்க கிறந்தி மேகம், சகல வியாதியும் குணமாகும். பத்தியம் கசப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

எண்ணெய் முறை :-

விளக்கெண்ணை படி.க, முடக்கொத்தான் சாறு படி.க, கய்யாந்த கரைச் சாறு படி.க, வெள்ளை வெங்காயம் படி.க, அரிஞ்சு போடவும். ஈர வெங்காயம் படி க, அரிஞ்சு போடவும். சமன் கூட்டிப் பொன்னிறமாகக் காய்ச்சி வடிச்சு மூன்று நாள் ஆறு வேளை இரண்டு காசிடை சாப்பிடவும். மறுநாள் முதல் ஒரு கரண்டி கொள்ளவும். இருபத்தொரு மேகமும் வாங்கிப் போகும். கை கண்டது. புளி, புகையிலை, கார்ப்பு, புளிப்பு தள்ளவும். இரண்டு தரம் பேதியாகும்.

(வேறு) கெந்தகம் விராகனிடை.ச, ரசம் விராகனிடை.ச, அரிதாரம் விராகனிடை.ங, வெள்ளைப் பாஷாணம் விராகனிடை.ங, மனோசிலை விராகனிடை.ங இந்த ஐந்து சரக்கும் அரைத்துப் பொடி பண்ணி சட்டியில் போட்டு உருகிற போது தண்ணீர் தெளித்து உருபடிப் போடவும். மாத்திரையாகும். சன்னி தோஷம் இதுகளுக்கு தேனில் கொடுக்கவும். சன்னி சுரத்துக்கு சுக்கு சித்திரத்தை சங்கம் வேர் கசாயத்தில் கொடுக்கவும்.

சுரத்துக்கு மாத்திரை பாசாணக் கட்டு :-

பாசாணங் கொண்டு வந்து முருங்கையிலை சாறு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்துத் தட்டான் கையில் உருக்கி ஆற விட்டு எடுக்க மாத்திரையாகும். சுரத்துக்கு வைக்கத் தீரும்

க்ஷயம், அக்கினிக் கட்டு பற்பம் := காந்தம் பலம்.க, கெந்தகம் பலம்.க, சூதக் பலம்.க, அரப்பொடி விராகனிடை.ரு, அரிதாரம் விராகனிடை.ரு, வாழ்ந்த குமரிச் சாறு விட்டு நன்று அரைத்து அடை பிடித்து தீந்த காமதனில் வைத்து தீயை எரியும் கண் டாயே. எரித்தால் பற்பம் பணவிடை தன் யினிய தேனில் கொள்ளவும். அரிந்த வயறு புளி ஏப்பம் அதிகா கிராணி கழிச்சலா் தெரிஞ்சு தேனில் இட்டுத் தீர வியாதியும் தீரும்.

மேகத்துக்கு மருந்து :-

குக்கில் விராகனிடை.எ, ரசம் விராகனிடை.ரு, எருக்கன் கரி விராகனிடை.ங,

இத முன்பும் சேர்த்து பருத்திச் சாறு விட்டு அரைத்து உருண்டை பண்ணி மேகம். உயர்க்கும் கொடுக்கவும். புண்ணுக்கு புகை போடவும்.

(வேறு) ஆசனத்தில் சானி கொண்டு வந்து சுட்டு பற்பம் எடுத்து சரிக்குச் சரி பாசாணம் போட்டு பீக்கல்ாத்திச் சாறு விட்டு அரைச்சு வில்லை பண்ணிக் காய வைத்து மேலோடு மூடி முட்டி.டு, முட்டியில் புடம் போடவும் பற்பமாகும். இதுக்குத் தீரும் வியாதி சுரம், சன்னி வாய்வு உஷ்ணம் தீரும்.

(வேறு) தாளகம் சுத்தி பண்ணி அகத்தியிலைச் சாறு விட்டு அரைத்து உருட்டி கவுசம் கொடுத்து மூன்று முட்டியில் புடம் போடவும் பற்பமாகும். இந்த பற்பம் சன்னி வாய்வு ஈளை இருமல் தீரும்.

(வேறு) ரசம் விராகனிடை.வ, ரசகற்பூரம் விராகனிடை.வ, சாதிக்காய் விராகனிடை.வ நன்னாரி யிலை கொடியோடே கொண்டு வந்து காய வைத்து அதைச் சுட்டு சரி பலம்.க, அட்டாச்சிக் கரி பலம்.ரு இந்த நாலு வகையும் பொடி பண்ணி எடுத்துக் கொண்டு மறுபடி சாத்தை விட்டு அதிலே பசுவின் வெண்ணை போட்டு மத்திச்சு உருண்டையாக உருட்டி பச்சைத் தண்ணியிலே ஊறவைக்குப் போட்டு வைத்து எடுத்து மத்தா நாள் பார்த்தால் உருண்டை கரையாமல் கிடக்கும். அதை எடுத்துச் சிமிளிலே வைத்துக் கொண்டு உசியிலையை வதக்கி அதிலே இந்த மை தடவி கிரந்திப் புண்ணுக்கு மூன்று பொழுது போட்டால் ஆறிப் போகும். சொரி சிரங்கு வெட்டுக் காயம் சிறங்கு இப்படிக் கொத்த ரணங்களெல்லாம் ஆறிப் போகும்.

கிறந்திக்கு மருந்து:-

உசியிலைச் சாறு சேர்.வ, நல்லெண்ணை சேர்.வ இது இரண்டும் கலந்து உள்ளுக்கு அந்தி சந்தி மூன்று வேளை கொடுக்கவும் தீரும். பத்தியம் கண்டிப்பு, துவரம் பருப்பு சுட்டலாம்.

வெட்டைக்கு மருந்து:-

வில்வ இலையை ஒரு பாக்கு அத்தனை அரைத்து உள்ளுக்கு அந்தி சந்தி மூன்று வேளை கொடுக்கவும் தீரும். இச்சா பத்தியம்.

(வேறு) ஏலம், விராகனிடை.வ, பொடி பண்ணி சந்தனத்துடனே கலந்து ரசம் வாங்கி குப்பை மேனிச் சாறு விட்டு ரசத்தை மத்திச்சு சந்தனத்துடனே கலந்து பூசவும். சொரி சிரங்கு ஆறிப் போகும்.

(வேறு) கல்லுப்பு பலம்.வ, வளவலுப்பு பலம்.வ, இந்துப்பு பலம்.வ, வானலுப்பு பலம்.வ, கெந்தக உப்பு பலம்.வ இதுகளை சேரக் கூட்டி கல்வத்தில் போட்டுக் குப்பை மேனிச் சாறு விட்டு நல்லாயரைத்து வில்லை தட்டி ஓட்டில் வைத்து ஒடு நனையச் சாறு விட்டு மேலோடு மூடி சீலைச்சீட புடத்தில் போட நீறிப் போகும். பின்னையு மரைத்து இந்தப் படி மூன்று புடம் போடவும். நீறிப் போகும். அதை ஆர்க்கப் பொடி செய்து சிமிளில் வைத்துக் கொண்டு அநுபானம் சகல வாய்வுக்கும் சகல சனிக்கு மாந்தத் தொந்தத்துக்கும் தேனில் சுக்கு கசாயத்தில் வெந்நீரில் கொடுக்கவும்.

மேல் கால் வீக்கம், கை வீக்கம் வயிறு உப்பல் இதுகளுக்கு:-

உப்பிலிக் கொடியைக் கொண்டு வந்து ஆட்டுக் கோமியம் விட்டு காய்ச்சி நன்று வடிகட்டி அரைக்கால் சேர் எடுத்துக் கொண்டு அதில் உப்புச் சூரணம் ஒரு பணவிடை போட்டுக் கொடுக்க வயறு போகும். மந்தார காசமெல்லாம் வழலை யெல்லாம் ஓடிப் போகும். சகலமுந் தீரும்.

வாய்வுக்கு மருந்து:-

சிறு மச்சி கொண்டு வந்து இரவுக்கு பச்சைத் தண்ணீரில் போட்டு வைத்து காலமே எடுத்து கழுவிப் போட்டு கலகலக்க பால் விட்டு மேலோடு மூடி சீலை மண் செய்து சட்டின் கீழ் பெரும்தத்தியிலை வைத்து மேலேயும் போட்டு ஒரு புடம் போட்டு எடுக்க வெந்து இருக்கும். அதை எடுத்துச் சிமிளில் வைத்துக் கொண்டு அதிலே ஒரு பணவிடை சகல வாய்வுக்கும்

சனி தோஷம், தோஷம் சுரம் பயித்தியம் இதுகளுக்கு தேனில் சுக்கு கசாயத்தில் இது களில் கொடுக்கவும் தீரும். மேல் செய்தது உப்பு சூரணமும் இந்த அமச்சி சூரணமும் இரண்டும் கலந்து எந்த வியாதிக்கும் போட்டால் எந்த வியாதியும் தீரும். இது கை கண்டது.

(வேறு) அரப்பொடி கொண்டு வந்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு ஒரு நாள் ஊற வைச்சு அதை எடுத்து கழுவிப் போட்டு அகலிலே வைத்து திரு நீத்துப் பச்சை சாறு விட்டு மேல் அகல் போட்டு சூலே மண் செய்து கெசப்புடம் போடவும் பற்பமாகும்.

(வேறு) கருவங்கும் கொண்டு வந்து ஒட்டில் வைத்து குயவன் சூளையில் வைத்து நாயுருவி சாறு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்துப் புடம் போடவும் பற்பமாகும்.

(வேறு) லிங்கம் கொண்டு வந்து கருங்கிலியம் கொண்டு வந்து பொடி பண்ணி அதை மூன்று பங்காய் பிரித்து அடுப்பில் ஓடு வைத்து அதிலே ஒரு பங்கு போட்டு லிங்கத்தை ஒரு நாழிகை பிறட்டி அதிலே இருக்கிற குழம்பை வழித்து அதிலே பசி சீலைத் துணியில் சுருட்டி விளக்கில் பிடிக்க மூன்று தரம் பிடித்தால் லிங்கம் கட்டும். அதை எடுத்து கல்லுச் சுண்ணாம்பு கொண்டு வந்து சட்டியிலே வைத்து ஆடு தின்னாப் பாளை கொண்டு வந்து அரைச்சு லிங்கத்துக்கு கவசம் கொடுத்து அந்த நீத்தில் வைத்து மேலே நீர் போட்டு அம்மி அடுப் பிலே வைத்து காலாக்கினியா எரிக்க லிங்கம் கட்டும்.

<u>தாளக பற்பம்</u>:-

தாளகத்தைப் பொடுதலைச் சாத்தில் அரைத்து குக்குடபுடம் போடவும் பற்ப மாகும்.

(வேறு) கத்தாளை சாறு விட்டு அரைத்து குக்குட புடம் போடவும். பற்பமாகும். செய் வதற்கு வகை யொன்று சொல்லக் கேளும். திரமான தாளகந்தான் சுத்தி செய்து அய் விரலிச் சாறு தான் சுருக்குத் தாக்கி அப்பனே மூன்று பிடியாவு பின்பு அப்பை யிலைச் சாறு படி தான் ஒன்று சீன சுண்ணம். நலமான கீழ் மேலாய் நடுவே வைத்து கவியவே முத்தீயு மூன்று சாமம் கட்டாக எரித்திடவு வெளுத்து நீரும் புவிதனிலே யிந் நீத்தை வைத்துக் கொண் டு போடவே பணவிடை தான் சர்க்கரையில் பொதிந்து கவியான சயரோகம் மந்தார காசம், கக்கின்ற ரெத்த செயம், பித்த தாசம். சய காசத்துக் கெல்லாம் தூதுவளை வேரு, கண்டங்கத்திரி வேர் அருஞ்சி விரை அரைத்து எலுமிச்சங் காயளவு முருங்கையிலை முசுமுசுக்கையிலை முடக்கத்தான் இலை, எலுமிச்சங் காயளவு இந்த வகை யெல்லாம் பசு வின் பால் விட்டு அரைத்துக் கொண்டு அரைத்த மருந்தை யெல்லாம் சட்டியிலே வைத்து அதி லொரு படி பசுவின் நெய் விட்டு ஒரு படி ஈர வெங்காயமும் தூதுவளைப் பழம் இரண்டையும் துவைத்து சாறு கொண்டு இதுக்கு கடைச் சரக்கு மிளகு, திப்பிலி, சீரகம், அதிமதுரம், கோஷ்டம், சித்திரத்தை, மிளகு, கஸ்தூரிமஞ்சள், வாய் விளங்கம், கொத்தமல்லி வகைக்கு விராகனிடை.உ, சாதிக்காய் விராகனிடை.உ, சாதிப்பத்திரி விராகனிடை.உ, கிராம்பு விராகனிடை.உ, ஏலம் விராகனிடை.உ, இலவங்கம் /1 பட்டை விராகனிடை.உ, லவங்கப் பத்திரி விராகனிடை.ரு இது வெல்லாம் ஆவின் பால் விட்டு அரை த்து மிஞ்சின பாலுங் கூட விட்டு சர்க்கரை விராகனிடை.ய, கூடப் போட்டு லேகியமாய் கிண்டி பதமாக வைத்துக் கொண்டு நேரத்துக்கு ஒரு கரண்டியாகக் கொண்டு இரண்டு நேர மும் அரை மண்டலம் கொள்ளவும். ஈர வெங்காயமும், தூதுவளம் பழமும் துவைத்து சர்க்கரையும் கூடச் சேர்த்து கஜீச்சி கொள்ளவும். தாகமாயிருந்தாலும் அதைச் சாறு பிழிஞ்சி சாப்பிடவும். பசுவின் நெய் கூட்டவும். நித்தம் சிவன் கோவிலுக்கு நாள் பசுவின் நெய் விளக்கு வைத்து தரிசனம் பண்ணவும். வேல் பிடித்த ஆண்டிக்கு இரண்டு பேருக்கு அன்னம் கொடுக்கவும். மருந்து சாப்பிடுகிற போது ஐங்காறு பூசை ௪ பண்ணி வைத்திய ருக்கு புது வஸ்திரம் வாங்கிக் கொடுத்து வயித்தியர் கையினாலே மருந்து தரச் சொல்லி சாப்பிட்டால் எந்த வியாதியுந் தீரும். ஈளை இருமல் இரைப்பு, காசம் என்றதெல்லாம் ஓடிப் போகும். இதுக்கு மகாரோக மென்று நீர் கண்டு கொள்ளும். இந்தப் படி நீர் செய்து சென்றவர்க்கு தீரும்.

(வேறு) பெரும் பாட்டுக்கு மருந்து:- தென்னம் பாலையும் உமித்துப் பொடியும்

மாதளம் கொழுந்தும் ஓட்டில் வைத்து பொய் வறலாக வறுத்துக் கொண்டு சர்க்கரை பலம் உ இது வெல்லாம் சேர்த்து பெரும்பாட்டுக்கு கொடுக்கவும் வியாதி தீரும்.

மேகத்துக்கு எண்ணெய் :-

விளக்கெண்ணை படி.க, வெள்ளறுகு சாறு படி.க, வல்லாரைச் சாறு படி.க, கழக்கொட்டிச் சாறு படி.க, ரசக்கற்பூரம் விராகனிடை.உ ஆக மருந்து வகை .ரு புங்கம் பால் படி.க, தேன் விட்டு மூன்று நாள் சாப்பிடவும். உதிர வெட்டை தீரும.

(வேறு). பங்கம் பால் கொண்டு வந்து ஓட்டிலே விட்டு நடுவே செந்திரிக்கம் வைத்து அதின் நடுவே சவ்வீரம் வைத்து கொட்டாச்சி போட்டு எரிக்க மெழுகு ஆகும். இந்தப் படி லிங்க மெழுகு ஆகும். வைக்கவும்.

(வேறு) கெந்தகம் கொண்டு வந்து கறண்டியில் வைத்து வெள்ளாட்டு நெய் ஊத்தி எரிக்க உருகும். பிறமிச்சாத்தில் ஊததி எடுக்க மெழுகு ஆகும்:

தாம்பிர பற்பம் :-

தாம்பிரம் கொண்டு வந்து சுத்தி பண்ணிப் பழகப் புத்து வாங்கி வந்த பச்சைத் தண்ணீர் விட்டு அரைத்து கவசம் கொடுத்து செசபுடம் போடவும் பற்பமாகும். வலி குன் மத்துக்கு தேனில் கொடுக்கவும் தீரும்.

தாளக கட்டு :-

தாளகங் கொண்டு வந்து ஓட்டிலே வைத்து பிரண்டைச் சாறு பின்னை நீர் விட்டு விட்டு சுண்ணாம்பு போட்டு கலக்கி சுருக்கு கொடுக்கவும். கட்டிப் போகும். உள்ளி வசம்பு முருங்கைப் பட்டை சில்லுப் பருப்பு களிச்சிப் பருப்பு எல்லாம் அரைத்து விளக்கெண்ணை விட்டுக் கிண்டி மூன்று தாலம் சாப்பிட விரை வாதம் அண்ட வாதம் தீரும்.

(வேறு) ஆடாதோடை வேரும் வெண்ணெச்சி வேரும் இதில் எருக்கம் பால் விட்டு அரைத்து தாம்புரத்துகைப் பூசி தாம்புரத்தை தகடாத் தட்டிப் பூசவும். பூசி அகல் வைத்துச் சீலை மன் செய்து கெசபுடம் போடவும் செந்தூரமாகும்.

நாகப் பற்பம் :-

நாகம் பலம்.க, கரண்டியிலே போட்டு ஒலையில் வைத்து உறிக்கில் உத்தாமணி வேர் நருக்கி அதில் போட்டு மலந்த பின்பு அதில் அந்தச் சாறு பத்து துளை விடவும். பற்பமாகும். அந்தப் பற்பத்தை எடுத்து சிமிளில் வைத்து கொண்டு தீரும் வியாதி மூலம் மூலக் கிறுணி பித்த வாய்வு, கை கால் எரிவு, இதுக க்கெல்லாம் அனுபானம் கடுக்காய், திப்பிலி இதை யெல்லாம் சூரணம் பண்ணித் தேன் விட்டு கலந்து ஒருபணவிடை பற்பம் கொடுக்கவும்.

(வேறு) வங்கத்தைச் சட்டியில் போட்டு பேரண்டம் பொடி பண்ணி அதில் போட்டு ஒருச் சாமம் மட்டும் வருக்கவும். பற்பமாகும். இதுக்குத் தீரும் வியாதி வெட்டை தீரும். அருக்கு வெள்ளை இது தீரும். கருத்திந்ம் தீரும் மேக சூடு பித்த சூடு வாய்வு இதுகள் தீரும். கிறுணி பாண்டு சோகை குன்மம் இது தீரும்.

செந்தூரம் :-

அரப்பொடி விராகனிடை.உ, காந்தம் விராகனிடை.உ இதை யெல்லாம் கலவத்தில் வைத்துக் குமரிச் சாறு விட்டு நாலு சாமம் அரைத்து வில்லை செய்து சட்டியில் குமரிச் சாறு விட்டு அதின் பேரில் வில்லை வைத்து நாலு சாமம் தீபாக்கினியாய்த் தீத்துப் போட்டு எடுகக செந்தூரமாகும். இதுக்கு அனுபானம் தேனில் வைத்து மத்தித்து சாப்பிடவும் தீரும்.

பெரும்பாடு தீர மருந்து :-

பெருங்காயம் பலம்.வ, பூண்டு பலம்.வ, பனைவெல்லம் பலம்.க இதை

இடித்து மூன்று நாள் கொடுக்கவும் தீரும்.

வெட்டைக்கு புண்ணுக்கு இது இரண்டுக்கும் எண்ணெய்:-

விளக்கெண்ணை சேர்.க, வெள்ளருகுச் சாறு சேர்.க, முலைப்பால் சேர்.க, பூரம் விராகனிடை.ந, இதை எண்ணெயில் பதமாக்கி ஐந்து நாள் கொள்ளவும் தீரும். இச்சா பத்தியம். கை கண்டது.

பூரம் விராகனிடை.ச, உத்தாமணி வேர்ப் பட்டை விராகனிடை.ச இதை நன்கு அரைத்து எடுத்துக் கொண்டு உருண்டை பனிரெண்டு செய்து ஒரு உருண்டையில் விளக்கெண்ணை காசி விராகனிடை, முலைப்பால் கால் விராகனிடை. வெள்ளருகு தூள் விராகனிடை.க இதை யெல்லாம் சேர்த்து ஒரு உருண்டையாய் மத்தித்து ஐந்து நாள் சாப்பிடவும். இச்சா பத்தியம். கை கண்டது.

வீரம் விராகனிடை. லிங்கம் விராகனிடை வீரத்தைப் பொடி செய்து சட்டியில் போட்டு செப்பு நெருஞ்சிச் சாறு ஈர வெங்காயச் சாறு இரண்டும் சமனாய் கூட்டி சுருக்கு கொடுக்க அதில் எண்ணை காணும் கண்டவுடனே லிங்கத்தைப் பொடி செய்து அதில் போட்டு சுருக்கு கொடுத்து எடுத்துக் கொள்ளவும்.

எண்பத்தினாலு வகைக்கும் சத்தியாபதி எண்ணெய்:-

முத்துக் கொட்டை வடித்த ஊத்தினது எண்ணை சேர்.உ, பூண்டு விராகனிடை.உ, காயம் விராகனிடை.உ, கல்லுப்பு விராகனிடை.உ, பொரிக்காரம் விராகனிடை.க, ஆகச் சரக்கு .எ மூலிகைச் சாறு வகை செருப்படி பொடுதலை கையாந்த கரை முடக் கொத்தான் தும்பை கொட்டைக் கரந்தை நுணாயிலை சிறு செருப்படி சவுரிக் கொடி களச்சி யிலை நொச்சியிலை உத்தாமணியிலை ஆடலாத்தி யிலை கொழிய வரையிலை, மூக்குறட்டை யிலை, வெள்ளைச் சாறணை வெதுப்படக்கி கரு நொச்சி கத்தாள மடல் பிரமிப் பண்டு வெள்ளச் சங்கிலை இந்த இருபத்து மூன்று வகையும் சரிமொக்க க்விழ்த்துச் சாறு வாங்கி சாறு சேர்.உ, பேய்க் கொம்மட்டிச் சாறு சேர்.உ, கூட விட்டு திருகு கள்ளிப் பால் சேர்.க, கூட விட்டு பதத்தில் வடித்த உள்ளுக்கு மூன்று விராகனிடை கொடுக்க அஉட்ட குன்மம் வாங்கிப் போம். அந்த எண்ணெயில் ஒரு கரண்டி கொடுக்க வெடி சூலை மேக சூலை கிறந்திப் புண் மேகரோகம் இதுகளெல்லாந் தீரும். தஞ்சாவூர் சுப்பிரமனிய முதலியாருக்கு கொடுத்த லெகுவானது. கை கண்டது.

தாளக பற்பம்:-

தாளகம் கொண்டு வந்து தாளகம் ஒரு பலம் பெரும் பூசனிக்காய்க் குள்ளே வைத்து ஒரு சீலை மண் செய்து குட்டியில் ஒரு குழி வெட்டி கெச புடம் போடவும். வண்டு கடி சூலை சுரம் சனி யீளை இருமல் இதுகளுக் கெல்லாம் தேனில் கொடுக்கவும். நாலா சுரத்துக்கு கெல்லாம் தீரும் வியாதி.

கெவுரி விராகனிடை.ச, சீரகம் விராகனிடை.க, தருசு விராகனிடை.க, துத்தம் விராகனிடை.உ எலுமச்சம் பழச் சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து பாசிப் பயறு அளவு உருண்டை செய்து இள வென்னீரில் கொடுக்க தீரும். அந்தி சந்தி இரண்டு காலமும் கொடுக்க தீரும்.

கண் வலிக்கு மருந்து:-

இந்துப்பு, திப்பிலி, பீதரோகனி இதை நந்தியாவட்டைப் பூச் சாத்தில் அரைத்து உருண்டை பண்ண அந்த முலைப் பாலிருந்தாலுற ஊத்தப் போடக் கண்ணு ரோகம் தீரும்.

மேகத்துக்கு எண்ணை முறை:-

விளக்கெண்ணை படி.க, முடக்கொத்தான் சாறு படி.க, கத்தாழைச் சாறு படி.க, வெள்ள வெங்காயம் படி.க, அரிஞ்சி போடவும். ஈர வெங்காயம் படி.க அரிஞ்சி போட்டு சமனாய் கூட்டி பொன்னிறமாகக் காய்ச்சி வடித்து மூன்று நாளா வேளை இரண்டு காசிடை சாப்பிடவும். மறுநாள் முதல் ஒரு கரண்டி கொள்ளவும். இருபத்தொரு மேகமும் வாங்கிப் போம். கை கண்டது. இரண்டு தரம் பேதியாகும்.

பெரும் பாட்டுக்கு மருந்து :-

சிறுகீரை வேர் அறுகங் கொழுந்து அரைத்து எருமைத் தயிரில் மூன்று நாள் கொள்ளவும்.
மறு முறை மருந்து :- விளாரி யிலையில் பசுவின் பால் விட்டு அரைத்து மூன்று பொழுது கொடுக்கத் தீரும்.
மறு மருந்து :- பாவட்டை வேர் பெருங்குறஞ்சா வேர், வறப்புலா வேர் தண்ணீர் விட்டு அரைத்து கறுப்பாட்டுப் பாலில் கரைத்துச் சாப்பிடத் தீரும் கொடுத்துக் கை கண்டது. பெரும்பாடு தீரும்.

கால் முகம் வீங்கினல் மருந்து :-

சாட்டறணை வேர் கொண்டு வந்து எலுமிச்சங் காயளவு அரைத்து பனைவெல்லம் சரிபாதி கூட்டி ஒரு படி தண்ணீர் வார்த்து உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும் தீரும். இதுக்குப் பத்தியம் அரிசி வறுத்துக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

(வேறு) அரப்பொடி கொண்டு வந்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு ஒரு நாளூற வைத்து மறு நாளெடுத்து புதுச் சட்டிக்குள்ளே வைத்து மருந்தும் பட்டைச் சாறு மிதக்க விட்டு வெய்யிலே வைத்துப் பற்பமாகும். இந்தப் படி வைக்கவும். மேக வெட்டைக்குத் தேனில் கொள்ளவும். பித்த வெட்டைக்கு தேனில் கொள்ளவும். இந்தப் படி 11 நாள் சாப்பிடவும் தீரும். இதுக்குப் பத்தியம் கசப்பு, புளிப்பு, புகையிலை தள்ளவும். கை கண்டது.

(வேறு) சங்கம் வேர் தலாம், வதக்கி நறுக்கி இடிச்சு எட்டுப் படி சலத்தில்ப் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி இந்தக் கசாயத்தில் மிளகு அரைத்து கசாயத்தில் கரைத்து இரண்டு படி நல்லெண்ணை விட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி இறுத்துக் கொண்டு வெந்நீரில் சீயக்காயிட்டு முழுகவும்.

சொறி, சிரங்கு, கிரந்தி, சூலை, செங்கரப்பான் வண்டு கடி சில் விஷங்கள் வலிப்பு க்ஷயம், குத்திருமல் வாத க்ஷயம், இவ்வளவுந் தீரும்.

பாஷாணக் கட்டு :-

பாஷாணக் கட்டிக்கு வெள்ளெருக்கம் பாலில் வெவ்வேறாய் சீலையிலூட்டி இந்தக் கட்டிக்கு ஏழு சீலை கவசங் கட்டி சீலைக் குகையில் மைச் சீலை செய்து சுக்குப் போலே காய்ந்த பிறகு ஓட்டில் வைத்து எரிச்சால் புளுவலியாய்க் கட்டிப் போகும்.

சாதிலிங்க கட்டு :-

சாதிலிங்கம் விராகனிடை.௪, கெந்தகம் விரகனிடை.௨, தாளகம் விராகனிடை.௨ ரசம் விராகனிடை.௨ இது மூன்றும் பொடி பண்ணி பானைச் செங்கல்க் கொண்டு வந்து அதில் குழி தோண்டி அதிலே கீழு மேலும் இந்த சூள் வைத்து நடுவே சாதிலிங்கக் கட்டி வைத்து இரண்டு சீலை மண் செய்து முழுப் புடம் போடவும். சாதிலிங்க கட்டி நிற்கும்.
(வேறு) தாளகம் கொண்டு வந்து அந்தக் கட்டிக்கு மாவிலை அரைத்து கவசம் கொடுத்து நன்றாய்க் காய்ந்த பிறகு வெள்ள நத்தாங் கூடு அரைத்து அதின் மேலே கவசங் கட்டி சட்டில் வைத்து மேலோடு மூடி அருவல்ப் போட்டு அதின் மேல் சீலை மண் செய்து சாண் புடம் போட்டு எடுத்துக் கொண்டு சொன்ன கசாயத்தில் வைக்கவும். தீரும் வியாதி ஈளை இருமல் மந்தார காசம், பக்க சூலை படுபாவியான சுரங்கள் சகலமும் தீரும்.
கொத்த மரம், முதநின மரம் வேர் கொண்டு வந்து பொடியாக்கிக் கொண்டு இந்தப் பெரு ஆவின் பாலில் கொண்டால் மூத்திரப் பானை மாறும்.

சத்தி குன்மத்துக்கு :-

வேப்பம் பட்டை விராகனிடை.௫, கடுரோகணி விராகனிடை.௬, கடுக்காய் விராகனிடை.௫, திப்பிலி விராகனிடை.௫ மிளகு விராகனிடை.௫ இலைக் கள்ளி வேர் பட்டை விராகனிடை.௨ எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து பருத்தி விரைப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தவும் பசுவின் கோமியத்திலே ஒரு உருண்டை காலமே கொடுக்கவும். இப்படி எட்டு நாள் தின்னவும். நாள் பட்ட வியாதிக்கு பதினைந்து நாள் தின்னவும். பசுவின் மோர் காய்ச்சிச் சோறு அசனம் பண்ணவும். வாயாலே எடுத்தாலும் பிறகு கொடுக்கலாம்.

ஒரு நாள் மாத்திரம் வாயாலெடுக்கும் சத்தி குன்மத்துக்கு வேப்பஞ் சாத்தில் இந்த உருண்டை கொடுக்கவும். வாந்தி நிற்கு மட்டும் கொடுக்கவும்.

ராத்திரிக்கு சுக்கு, திப்பிலி மூலம் வகைக்கு இரண்டு விராகனிடை இடிச்சு கசாயம் பண்ணி ராத்திரி அசனத்தின் மேலே கொடுக்கவும். பத்தியம் பசுவின் பால், மோர், தயி தண்ணீரில் கலந்து கொடுக்கவும். பத்தியம் பசுவின்

பிரமியத்துக்கு நல்லெண்ணெய் படி.[illegible], துளசிச் சாறு படி.[illegible], இது இரண்டும் சேர்த்து இரண்டு நாள் கொள்ளவும். புளி விடவும். உப்பாம். தீரும் வியாதி பிரமியம், பெரும்பாடு, வெள்ளை விழுகிறதும், பிரமயத்துன மாங்கிஷ மடைப்புக் கல்லடைப்பு தீரும். அகத்திக் காம்பு அவுரிச் சாறு படி.ரு நல்லெண்ணெய் படி.ரு புளி விட்டு மூன்று நாள் கொள்ளவும்.

வயிற்றுக் கடுப்புக்கு:-

புளியங் கொட்டை தரைவு விராகனிடை.ரு, சுக்கு விராகனிடை.ரு, பொடி பண்ணி வடி கட்டி பெண் பிடி எருமைத் தயிரிலே கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம்.

பாம்பு அடக்கும்:-

முருங்கை விரை நாகு, மிளகு ருது தனித் தனி பொடி செய்து புளியிலைச் சாத்திலரைத்து கலக்கி கலப்பிறத்தில் தப்பி வைத்து தயிலம் விழும். தயிலம் விழாதிருந்தால் பிழிந்து ஒரு சிமிழில் வைத்துக் கொண்டு இந்த தயிலத்துடனே கால் வெங்காரமும் கால் பெருங்காயமும் குளம்புடன் கூட்டி வைத்து ஒரு மா மாத்திரம் கண்ணிலிட விஷந் தீண்டி லடக்க மெழுந்திருக்கும்.

வயத்தில் மரித்த பிள்ளை விழ:-

ஏலமும், அரசங் கொம்புங் காடியில் கொடுக்கவும். முத்திருக்கஞ் செவி யிலையை ஒரு கொட்டைக் காசளவு காதிலே பூசியவும்.

சன்னிக்கு புகை:-

பெருங்காயம் புளியங் கொட்டை அளவு அரைப்படி அகத்தியிலைச் சாத்தில் கலந்து கொ* வெள்ளைச் சீலையில் சுவறச் சுவறப் பிடிச்சு காய வைத்துக் கொண்டு சன்னி வந்த வுடனே திரியைக் கொளுத்திப் புகையை மூக்கில் ஏறப் பிடிக்கச் சன்னி விடும்.

ஆனந்த வயிரவன்:-

சாதிலிங்கம், நாவி, சுக்கு, மிளகு, திப்பிலி, வெங்காயம், கெந்தகம், இது வெல்லாம் வகைக்கு ஒரு விராகனிடை நேர்வாளம் விராகனிடை.எ எலுமிச்சம் பழச் சாத்தி லரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு பயித்திய சுரத் துக்கும் புதுச் சுரத்துக்கும் பழஞ் சுரத்துக்கும் இஞ்சிச் சாத்திலிடவும். குளிர் சுரத்துக்கு இஞ்சியிலிடவும். தாப சுரத்துக்குப் பசுவின் வெண்ணெயிலிடவும். சன்னி வாத சுரத்துக்கும் சீத சுரத்துக்கும் இஞ்சச் சாத்திலிடவும், சீதாங்க சுரத்துக்கு ஆடாதோடைச் சாத்திலிடவும். வயித்தில் கழிச்சலுக்கு தேனிலிடவும். மேல் இழுப்புக்கும் இருமலுக்கும் ஆடாதோடைச் சாத்திலிடவும். சகல கழிச்சலுக்கு ஆவாரைப் பூச் சாத்திலாகிலும் பசுவின் வெண்ணெயிலாகிலும் விடவும். காலுண்டையாகிலும் அரையுண்டையாகிலும வியாதி கண்டு ஆள் கண்டு இடவும்.

மேக நக்* நாதன் உருண்டை:-

சாதிலிங்கம், வெங்காரம், சுக்கு, திப்பிலி இந்துப்பு சிவதை வேர், பெருங் காயம், வசம்பு, வாய்விளங்கும, ஓமம் இது வெல்லாம் சரி சமானமாகக் கூட்டி எலுமிச்சம் பழச் சாத்தில் அரைத்துக் கொண்டு குண்டு மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு வெந்நீரில் கொடுக்கவும். பஞ்சு குன்மம், க்ஷய பாண்டு ரோகம், திரி தோஷம், சுவாச முதல் தீரும்.

கெற்ப் குலைக்கு மருந்து:-

சுக்கு காய்ச்சி நெய் விட்டுக் கொடுக்கவும்.

கறந்தி மேல் சுரத்துக்கு:- நாகப்பூ பாலை வேர் நன்னாரி வட்டத் திருப்பி யிரு வேலி முத்தக் காசி, சுக்கு இவை கூட்டி கசாயங் கொடுக்க சுரம் போம்.

(வேறு) குவளை வேர் பாலில் போட்டுக் காய்ச்சி நெய் விட்டுக் குடிக்க யோனி சூலை போம்.

கெர்ப சூலைக்கு:- தேங்காய்ப் பாலும் பசுவின் பாலும் கஞ்சி குடிக்க கெர்பசூலை போம்.

கெர்ப்பத்தின் மேல் கழிச்சலுக்கு:-

காஞ்சொறி சித்தாமுட்டி வட்டத் திருப்பி சுக்கு, முத்தக் காசு இவை கூட்டி நீராய் இட்டுக் கொள்ள கெர்பக் கழிச்சல் நிற்கும். அதிமதுரம் நெய்தல் கிழங்கு பாலிலரைத்து நெய் கலந்து குடிக்க கழிச்சல் நிற்கும்.

காது செவிட்டுக்கு:-

அத்திப் பட்டை பாகல் விரை, வேப்பம் பருப்பு, கடல் நுரை, வலம்புரிக் காய், தாழைக் கிழங்கு, செம்பு காப்பு நல்ல எண்ணெய் விளக்கெண்ணெய், பசுவின் நெய் எல்லாஞ் சேர்த்து கொதிக்க வைத்து காதில் விடக் கேட்கும்.

மேகம் எண்பத்திநாலுக்கும் சத்தியாபதி எண்ணெய்:-

ஆமணக்கு கொட்டை வறுத்து ஆட்டின எண்ணெய் சேர்.உ பண்டு விராகனிடை.உ, காயம் விராகனிடை.உ, கல்லுப்பு விராகனிடை.உ வளையலுப்பு விராகனிடை.உ, வெடியுப்பு விராகனிடை.உ, இந்துப்பு விராகனிடை.உ வெங்காரம் விராகனிடை.க, ஆகச் சரக்கு எ மூலிகை வகை செருப்படி பொடுதலை கய்யான் ஈகரை முடக் கொத்தான் தும்பை கொட்டைக் கரந்தை சிறு செருப்படி சவுரிக் கொடி களச்சியிலை நொச்சியிலை உத்தாமணி யிலை ஆலாத்தி யிலை, கோழியாவாரை யிலை, முக்குறட்டை யிலை, வெள்ளச் சாறணை வெதுப்படக்கி காட்டு நொச்சி கத்தாழை மடல் பிரமிப் பூண்டு வெள்ளச் சங்கிலை கோவையிலை இந்த இருபத்து மூன்று வகையும் சரியொக்க துவைத்து சாறு வாங்கி சாறு சேர்.உ, பேய்க் கொமட்டி சாறு சேர்.உ, சுட்ட விட்டு திருகு கள்ளிச் சாறு சேர்.க, சுட்ட விட்டு பதத்தில் வடித்து உள்ளுக்கு மூன்று விராகனிடை கொடுக்க அஷ்ட குன்மம் வாங்கிப் போம். அந்த எண்ணெயில் ஒரு கரண்டி கொடுக்க வெடி சூலை, மேக சூலை கிரந்திப் புண் மேகரோகம் இதுகளெல்லாம் தீரும்.

மேகப் புண்ணுக்கு சேர்வை:- வீரம் விராகனிடை.க, எருமை வெண்ணெய் சேர்த்துப் புண்ணில் போடக் காயும்.

மேகத்துக்கு எண்ணெய்:- தேங்காய் தன் பால் படி.உ, பொடுதலை சாறு படி.உ; சேர்த்து எரித்து மேல் பொடி பூரம் விராகனிடை.க, வல்ரா துட்டான் விராகனிடை.உ இரண்டும் பொடி பண்ணிப் போட்டு வைத்து சாப்பிடவும். தீரும் வியாதி திமிர் புண்ணு பெருவியாதி இதுகள் தீரும். உப்பு இல்லை. பத்தியம் விளக்கெண்ணெய் தேய்ச்சு முழுகவும். முப்பது நாள் பலாப் பழம் வாழைப் பழம், மிந்தக் கரிகள் ஆகாது. திமிருக்கு கொட்டாச்சி உடைச்சுப் பானையில் போட்டு வீரம் இரண்டு விராகனிடை போட்டு குழித் தயிலம் வாங்கித் திமிருக்குப் போடத் திமிர் வாங்கிப் போம். தீரும். சிவனுக்கு அபிஷேகம் பிராமண போசனம் நெய் விளக்கு செய்யவும் தீரும்.

******

முற்றும்.

******

சு.ச: 4.2.63.

completed verification on 27/3/63

Sundaram 27/3/63

1325